Registered as a Newspaper

# தினச்செய்தி

வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

**உள்ளே...**




- அறுநூறு கத்தோலிக்கர்களை சிரச்சேதம் செய்த சங்கிலி மன்னன் - பக். 05
- பிரபாகரனின் வாழ்க்கை வரலாறும் சமகால நிகழ்வுகளும் - பக். 07




விலை : ரூபா 20.00

செய்தி - 43 | ஜூலை 23-29, 2016 | பக்கம் - 20

# கபாலிடா...! நெருப்புடா...!

## யாழில் தீ பரவுகின்றது:




(கொழும்பு)

சுப்பர் ஸ்ரார் ரஜனிகாந்த் நடித்த கபாலி படம் நேற்று 22 ஆம் திகதி உலகம் முழுவதும் வெளியாயிற்று. இந்த படம் தமிழிலும், தெலுங்கிவிலும், ஹிந்தியிலும் மலேயிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அமெரிக்காவில் 400 திரையரங்குகளிலும் மத்திய கிழக்கு நாடுகளில் 200 திரையரங்குகளிலும் இந்தப் படம் வெளிவந்துள்ளது.

65 வயதுடைய சுப்பர் ஸ்டார் ரஜனி காந்தின் கபாலி படம் நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள திரையரங்குகளில் வெளியானது. வயது போன வேஷத்தில் ரஜனிகாந் தாதாவாக இந்த படத்தில் நடிக்கிறார்.

மக்கள் முண்டியடித்துக் கொண்டு காட்சிகளைப் பார்த்தார்கள்.

02 இல்



## நம்ம வீரர்கள் தங்கம் வெல்வார்களா?

பிறேஸிலில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் விளையாட்டு போட்டிகளில் இலங்கை வீரர்கள், வீராங்கனைகளை ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேனா தனது வாசஸ்தலத்தில் வைத்து சந்தித்தார். அவர்களுடன் கலந்துரையாடிய ஜனாதிபதி, "வெற்றி பெறுவது நாட்டு மக்களின் எதிர்பார்ப்பாக இருக்கிறது. அதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவும்" என்று ஆலோசனை வழங்கினார்.

02 இல்

## ஐ.நா. பொதுச் செயலாளருக்கு பன்னிருவர் போட்டி



ஐ.நா.வின் அடுத்த பொதுச் செயலரைத் தேர்ந்தெடுப்பதற்கான இரகசிய வாக்குப்பதிவு, வியாழக்கிழமை நடைபெற்றது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 12 பேர் அந்தப் பதவிக்காகப் போட்டியிடுகின்றனர். தற்போதைய பொதுச் செயலர் பான் கீ - மூனின் பதவிக் காலம் இந்த ஆண்டுடன் முடிவடைகிறது.

02 இல்

## காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக்கு அரோஹரா



(கொழும்பு)

காங்கேசன்துறையில் மீண்டும் சீமெந்து உற்பத்தி செய்யும் தொழிற்சாலை வரவே வராது என அரச உயர்மட்ட அதிகாரிகள் கூறுகின்றனர். கடந்த ஏப்ரல் மாதம் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த கைத்தொழில் வர்த்தக அமைச்சர் ரிஸாட் பதியுதீன் கங்கேசன்துறையில் சீமெந்துத் தொழிற்சாலையை மீண்டும் அமைத்தே தீருவேன் என சூளுரைத்தார்.

02 இல்

**கொண்டோடிச் சுப்பர்**



# தினச்செய்தி

வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

தொலைபேசி : 021 2242636
தொலைநகல் : 021 2242139
இணையதளம் : www.thinacheithi.com/lk


## அமெரிக்கா அதிபர் தேர்தலும் குடியரசுக் கட்சியும்

அமெரிக்காவின் அதிபர் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த தேர்தலில் அமொரிக்காவில் உள்ள இரண்டு பெரிய கட்சிகள் போட்டியிடுகின்றன. இந்த போட்டிக்காக சென்ற பெப்ரவரி 1 ஆம் திகதி தொடக்கம் யூன் 14 ஆம் திகதி வரை வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான உட்கட்சித் தேர்தல்கள் நடைபெற்றன.

இந்தத் தேர்தலில் இரண்டு முக்கிய கட்சிகளான குடியரசுக் கட்சியும், ஜனநாயகக் கட்சியும் போட்டியிடுகின்றன. அந்தக் கட்சிகளில் போட்டியிடுகின்ற டொனால்ட் டிரம்ப், ஹிலாரி கிளிண்டன் ஆகிய இருவருக்கும் இடையில் உண்மையான போட்டி நிலவுகின்றது.

அதே நேரத்தில் பல மூன்றாம் கட்சி வேட்பாளர்களும், சுயேட்சைகளும் கூட இந்த ஜனாதிபததி தேர்தலில் போட்டியிடுகிறார்கள். லிபர்ட்டேரியன் கட்சி, பசுமைக் கட்சி ஆகியவற்றின் வேட்பாளர்களும் போட்டி இடுகிறார்கள்.

லிபர்டேரியன் கட்சி சார்பில் முன்னாள் நியூ மெக்சிகோ மாநிலத்தின் ஆளுனர் ஹரி ஜோன்சனும், பசுமைக் கட்சி சார்பில் திருமதி ஜில் ரொப்னும் போட்டியிடுகிறார்கள். இவர்கள் இருவரும் 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதிக் தேர்தலில் போட்டியிட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அண்மையில் குடியரசுக் கட்சி வேட்பாளர் உத்தியோக பூர்வமாகத் தெரிவு செய்வதற்கு குடியரசுக் கட்சியின் நான்கு நாள் மாநாடு ஓகியோ மாகாணத்தில் கிளீவ்லேண்டில் நடைபெற்றது.

பத்து மாதங்களுக்கு முன்பாக அரசியலில் முகம் காட்டத் தொடங்கிய டொனால்ட் டிரம்ப் மிகப்பெரிய ரியல் எஸ்டேட் தொழிலதிபர் என்பது குறிப்பிடதக்கது.

அமெரிக்கா ஜனநாயகம் தேசியவாதத்தை பல்வேறு சர்ச்சைக்குரிய விதங்களில் இவர் பிரதிநிதித்துவம் செய்து வருகின்றார். அமெரிக்கா ஜனநாயகம் போற்றும் பல மதிப்பு மிக்க நடைமுறைகளை மிகக் கடுமையாக விமர்சித்து வந்ததுடன் கடுமையான சர்ச்சைகளையும் தோற்றுவித்து பிரசாரங்களில் ஈடுபட்டு வந்தார்.

இந்த பிரசாரத்தின் போது டொனால்ட் டிரம்ப் கூறிய சர்ச்சை, சில உலக நாடுகளின் தலைவர்கள் அவர் மீது கடும் அதிருப்தியைக் கிளம்பியது. குறிப்பாக இஸ்லாம் மதத்திற்கு எதிராக டொனால்ட் டிரம்பின் கருத்து சர்ச்சைக்குள்ளானது.

பிரிவினை வாத சிந்தனை கொண்ட டொனால்ட் டிரம்ப் அமெரிக்கா அதிபர் வேட்பாளராக நிறுத்தப்பட்டால் புதிய கண்டு பிடிப்புகளுக்கு பேராபத்து ஏற்படும் என அமெரிக்கா தொழில் நிபுணர்கள் கருத்தை தெரிவித்தனர்.

கிளீவ்லேண்டில் நடைபெற்ற குடியரசு கட்சி மாநாட்டில் 58 பக்க தேர்தல் அறிக்கையை டொனால்ட் டிரம்ப் வெளியிட்டார். அந்த அறிக்கையில் ஸ்ரீ லங்காவைப் பற்றி ஒரு வார்த்தை கூட அவர் குறிப்பிடவில்லை. டிரம்பைப் பொறுத்த வரை இலங்கை ஒரு கிள்ளுக்கீரை நாடு.

ஆனால் இந்தியா பற்றி குறிப்பிடும் பொழுது "புவியியல் அரசியல்ரீதியாக மிக நெருக்கமான நட்பு நாடாக விளங்குகின்றது, நான் அதிபராகப் பதவி ஏற்றால் இந்தியாவுடனான உறவை மேலும் வலுப்படுத்துவேன்" என்று டிரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

அதே வேளையில் அமெரிக்கா அதிபர் வேட்பாளர் ஹிலாரி கிளிண்டன், டொனால்ட் டிரம்ப் அமெரிக்க ஜனநாயகத்திற்கு பெரும் ஆபத்தானவர் எனக் குற்றம் சாட்டுகிறார். கிளீவ்லேண்டில் நடந்த குடியரசுக் கட்சி மாநாட்டில் டொனால்ட் டிரம்பின் உரை நடந்து கொண்டிருக்கம் போதே ட்டுவிட்டர் தளத்தில் ஹிலாரி கிளிண்டன் பதிலடி வெளியிட்டார்.

தன் மீது டொனால்ட் டிரம்ப் விமர்சித்ததற்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஹிலாரி கிளிண்டன் அளித்துள்ள பதிலில் டிரம்பின் பேச்சை பெரும்பான்மை மக்கள் புறக்கணித்ததாக குற்றம் சாட்டினார்.

டொனாட் டிரம்ப் இலங்கையைப் பற்றி ஒரு வார்த்தையும் குறிப்பிடவில்லை. அதே நேரம் ஹிலாரி கிளிண்டன் வெளிவிவகார அமைச்சராக இருந்த போது இலங்கைக்கு எதிரான தீர்மானங்களை முதன் முதலில் ஜெனிவாவில் ஐ.நா. சபையின் மனித உரிமை அமைப்பில் கொண்டு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

டிரம்போ, ஹிலாரியோ இலங்கையை பொறுத்தவரையில் நண்பர்களாக இருப்பார்களா என்று சொல்ல முடியாது.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## கபாலிடா...

சிவாஜி ராஜ் கேக்வாட் என்ற பெயருடைய ரஜினிகாந்த் 12 ஆம் திகதி டிசம்பர் மாதம் 1950 ஆம் ஆண்டு பிறந்தார். ஆரம்பத்தில் பஸ் நடத்துனராக வாழ்க்கையை ஆரம்பித்த ரஜினி முதன் முதலில் கே. பாலசந்திரனின் அபூர்வ ராகங்களில் தனது திரைப்படப் பயணத்தை ஆரம்பித்தார்.

ரஜினிகாந்தின் கபாலி படத்தில் மொத்தமாக 5 பாடல்கள் உள்ளன. பாடல்களுக்கு இசையமைத்தவர் சந்தோஷ் நாராயணன். படத்தை எழுதி இயக்கியவர் பா. ரஞ்சித். தயாரிப்பு கலைப் புலி தாணு.

இந்த படத்தின் படப்பிடிப்பு மலேசியாவிலும் தாய்லாந்திலும் ஹொங் கொஹங்கிலும் நடைபெற்றது.

ரஜனிகாந்துடன் ராதிகாஆப்தே மற்றும் தாய்வான் நடிகர் வின் ஷன் சபோ, தனுஷ்கா, ரவி, கலையரசன், ஜேன் விஜி ஆகியோர் நடிக்கிறார்கள்.

இந்தப் படத்தின் படப்பிடிப்பு ஆகஸ்ட் 21, 2015 ஆம் ஆண்டு ஆரம்பமானது. உடல்நலக் குறை வாக இருந்த ரஜினிகாந்த் இந்தப் படத்தில் கலந்து கொண்டு நடித்து முடிப்பாரா என்ற சந்தேகம் எல் லோர் மத்தியிலும் எழுந்தது.

அதே நேரம், ஸ்ரீலங்கா ரெலிகொம் இலங்கை அரசாங்கத்திற்கு சொந்தமானது. இந்த ரெலிகொம் கபாலி படப் பாடல்களை வைத்து ரஜினியை சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதாக அழைப்பு விடுத்துள்ளது.

இது தொடர்பான விளம்பரம் ஒன்றில் நெருப்பு எனும் சுப்பர் ஸ்டாரை நெருங்கிப் பார்க்கலாம் என்று வெளியிடப்பட்டுள்ளது. அதில் கபாலிடா.. மகிழ்ச்சி, போன்ற கபாலி வசனங்கள் பற்றியும் உலகம் ஒருவனுக்கடா, நெருப்புடா போன்ற பாடல்கள் வெளியிட்டு ரிங் ரோனாக பாவிக்கலாம் என்றும் அழைப்பு விடப் பட்டு ரஜினியை நேரில் பார்க் கலாம் என்றும் சொல்கிறது இந்த விளம்பரம்.

இந்த விளம்பரம் தமிழ், ஆங் கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட்டுள் ளது. அதுவும் இந்த சலுகை ஆகஸ்ட் 15 ஆம் திகதி வரை தானாம்.

யாழ்ப்பாணத்தில் சிலோன் தியேட்டர்களின் திரையரங்குக ளான பிளாட்டினம், சில்வர், புறோட்ஸ் ஆகிய கார்கில்ஸ் சதுக் கத்தில் 3 ஆம் மாடியில் அமைந் துள்ளன.

இந்த மூன்று திரையரங்குகளி லும் மொத்தமாக 623 ஆசனங் கள் உள்ளது. இந்த மூன்று திரையரங்குகளிலும் நேற்று காலை 7.30 மணியளவில் காட்சி ஆரம்பமாகிற்று. இங்கே 7.30, 10.30, 2.30, 6.30, 9.30 மணி களில் இந்த படக் காட்சிகள் காண பிக்கப்படுகின்றன. திரையரங் கிற்கு தொடர்பு கொண்டபோது இங்கே படத்தின் ரிக்கட் ரூபா.400 என்றும் மேல திகமாக எப்போதும் நாங்கள் எந்த படத்தின் ரிக்கட்டின் விலை கூட்டுவது இல்லை என்றும் கூறினார்.

ஆனால் வெளியில் ஒரு ரிக் கட்டின் விலை ரூபா. 1000 வரை சென்றதாக தினச்செய்திக்கு செய் திக்கு தகவல்கள் கிட்டின.

நேற்று காலை 7.30 மணி யளவில் இந்த திரையரங்குகளில் மிக முக்கிய பிரமுகர்களுக்கு (வி. ஐ.பி) காட்சி காண்பிக்கப்பட்டது.

(தொடர்ச்சி 18 இல்)

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## ஐ.நா.பொதுச்...

இந்தநிலையில், அடுத்தபொதுச் செயலரைத் தேர்ந்தெடுப்பதற்கான இரகசிய வாக்குப் பதிவு வியாழக் கிழமை நடைபெற்றது. ஐ.நா. விதிமுறைகளின்படி, பாதுகாப் புக் கவுன்சில் பரிந்துரையின் அடிப் படையில், 193 உறுப்பினர்களைக் கொண்டபொதுக்குழுஐ.நா. பொதுச் செயலரைத் தேர்ந்தெடுக்கும். தேர்ந்தெடுக்கப்படும் பொதுச் செய லரை ஏற்க மறுக்கும் அதிகாரம் பாதுகாப்புக் கவுன்சில் நிரந்தர உறுப்பு நாடுகளுக்கு உண்டு.

விதிமுறைகளில் இல்லாவிட்டா லும், உலகின் அனைத்துப் பிராந் தியத்தினருக்கும் வாய்ப்பளிக்கும் வகையில், சுழற்சி முறையில் ஒவ் வொரு பிராந்தியத்தைச் சேர்ந்த வரும் பொதுச் செயலராக நியமிக் கப்படுவது மரபாக இருந்து வரு கிறது.

அந்த வகையில், ஆசியா, ஆபி ரிக்கா, தென் அமெரிக்கா, ஐரோப் பாவைச் சேர்ந்தவர்கள் சுழற்சி முறையில் ஐ.நா.வின்தலைமைப் பொறுப்பை வகித்துள்ளனர். இந் நிலையில், பான் கீ-மூனுக்கு அடுத்ததாக தங்கள் நாடுகளைச் சேர்ந்தவர்கள்தான் அடுத்த பொதுச் செயலாளராக வேண்டும் என்று ரஷ்யா உள்ளிட்ட கிழக்கு ஐரோப்பிய நாடுகள் வலியுறுத்தி வருகின்றன.

மேலும், இதுவரை ஒரு பெண் பொதுச் செயலர் கூட நியமிக்கப்பட்டதில்லை என்பதால், ஒரு பெண்தான் அடுத்த பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று 56 உறுப்பு நாடுகள் வலியுறுத்தி, பிரசாரம் மேற்கொண்டு வருகின்றன.

இதுதொடர்பாக வியாழக் கிழமை நடைபெற்ற வாக்குப் பதி வில் 12 பேர் போட்டியிட்டனர். போட்டியாளர்களில் 6 பேர் பெண் கள் என்பது குறிப்பிடத்தக்கது. எட்டு பேர் கிழக்கு ஐரோப்பாவைச் சேர்ந்தவர்கள். இருவர் தென் அமெ ரிக்காவையும், ஒருவர் மேற்கு ஐரோப்பாவையும் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அடுத்த பொதுச் செயலர் பதவிக்கான போட்டியில், இதுவரை இல்லாத வகையில் வெளிப்படைத் தன்மை அதிகம் இருப்பதாகக் கூறப்படு கிறது.

முதல்முறையாக ஐ.நா. பொதுக் குழு உறுப்பினர்கள், தூ தர்கள், செய்தியாளர்கள் முன் னிலையில் தாங்கள் ஏன் பொதுச் செயலராக விரும்புகிறோம் என்று போட்டியாளர்கள் விளக்கம் அளித் தனர். இதைத் தவிர, பாதுகாப்புக் கவுன்சில் உறுப்பினர்கள் முன் னிலையிலும் போட்டியாளர்கள் தனித்தனியாக "நேர்காணலில்' கலந்து கொண்டனர்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## நம்ம வீரர்கள் ...

பிறேஸிலில் நடைபெறவுள்ள 'றியோ - 2016" ஒலிம்பிக் போட் டியை முன்னிட்டு நினைவு முத்தி ரைகள் நான்கும், முதல் நாள் தபால் உறை ஒன்றும் தபால் திணைக்களத்தால் வெளியிடப் பட்டன.

ஒலிம்பிக் விளையாட்டுப் போட் டிகள் பிறேஸிலில உள்ள றியோ தா ஜனேரா நகரில் ஆகஸ்ட் 5 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இந்த விளையாட்டு போட்டியில் உலகத்தில் உள்ள 206 நாடுகளில் இருந்து 10500 விளையாட்டு வீரர் கள் பங்குபற்றுகிறார்கள்.

இங்கே 28 தடகள விளை யாட்டுப் போட்டிகள் உள்ளன. மொத்தமாக 306 தங்கப் பதக்கம், வெள்ளி பதக்கம், பித்தளைப் பதக் கங்களை விளையாட்டு வீரர்கள் வென்றெடுக்க வேண்டும்.

இலங்கையில் இருந்து மொத் தமாக 9 விளையாட்டு வீரர்கள் பங்குபற்றுகிறார்கள். இந்த விளை யாட்டுகள் ஆண், பெண்களுக் கான மரதன் ஓட்டம், ஜவலின் எறிதல், பற்மின்ரன் மற்றும் துப் பாக்கி சூடு போட்டிகளில் பங்கு பற்றுகிறார்கள்.

இந்த ஜனாதிபதி சந்திப்பின் போது விளையாட்டுத்துறை அமைச் சர் டயஸ் ஸ்ரீஜெயசேகரா, தபால் துறை அமைச்சர் அப்துல் சலீம் மற்றும் இலங்கை ஒலிம்பிக் கமிட் டியின் தலைவர் ஹேமஸ்ரீ பெர் னாண்டோ ஆகியோர் பங்குபற்றி னார்கள்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## காங்கேசன்...

இங்கே என்ன நடக்கின்றது? காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற் சாலை மொத்தம் 650 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்டது. அதில் 65 ஏக்கர் ஏற்கனவே சிறைச்சாலைகள், மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற் றும் இந்து சமய விவகார அமைச்சு பெற்று 139 வீடுகளை கட்டும் வேலையை ஆரம்பித்துள்ளது.

சீமெந்துத் தொழிற்சாலைக்கு அருகிலே வீடுகள் கட்டினால் தொழிற்சாலை இயங்குவது எப்படி என அரச உயர் மட்டத்திடம் கேட்டபோது அங்கே சீமெந்து உற்பத்தி செய்யப்போவதாக உங் களுக்கு யார் சொன்னது? சீமெந் தைப் பொதி செய்யும் வேலைதான் நடைபெறும். உற்பத்தி என்ற பேச் சுக்கே இடமில்லை என்றார்கள்.

இது தொடர்பாக அமைச்சர் ரிசாட்டுடன் தொடர்பு கொள்ள முயன்றபோது அவர் கென்யத் தலைநகரான நைரோபி நகரில் 22 ஆம் திகதி நடக்கும் அன்ராட் மாநாட்டுக்காகச் சென்றதாகத் தெரிய வருகிறது.

# இலங்கையில் அமெரிக்க கடற்படைக் கப்பல்

(கொழும்பு)

அமெரிக்க கடற்படையின் 13 ஆவது கடற்படை ஆய்வுப் பிரிவுடன் இணந்ததாக யு.எஸ்.எஸ். நியூ ஓர்லீன்ஸ் (எல். பி. டீ 18) எனும் கப்பல் கொழும்பு துறைமுகத்தை வந்தடையவுள்ளது.


இந்த கப்பல் எதிர்வரும் 24 ஆம் திகதி இலங்கையின் கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டிருக்கும் என அமெரிக்க தூதரகம் அறிவித்துள்ளது.

இலங்கை கடற்படையுடன் இருதரப்பு உறவுகளை அதிகரிப்பதற்கும் மனிதநேய உதவி மற்றும் அனர்த்த நிவாரணம் தொடர்பில் அனுபவங்களையும் பயிற்சிகளையும் வழங்குவதற்கும் இந்த கப்பல் மற்றும் MEU பிரிவு என்பன இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளன.

"கடலோர பாதுகாப்பு மற்றும் நிலைபேற்றிற்கான பிரதான சக்தியாக மாறுவதற்கு இலங்கைக் கடற்படையுடன் இணைந்து பணியாற்றுவதற்கு அமெரிக்கா ஆர்வத்துடன் உள்ளதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் தெரிவித்துள்ளார்.

இந்த கப்பலில் 13 ஆவது MEU உறுப்பினர்கள், சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க நிறுவனத்தின் நிபுணர்களினால் நடத்தப்படும் இரண்டு நாள் மனிதநேய மற்றும் அனர்த்த நிவாரண பயிற்சிகளில் இலங்கைக் கடற்படையைச் சேர்ந்த சுமார் 200 மாலுமிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இலவச கல்வி மற்றும் அனுபவங்களை பகிர்ந்து கொள்வதற்கு அமெரிக்கத் தூதரக அதிகாரிகளுடன் இணைந்து மாலுமிகளும் கடற்படை வீரர்களும் கொழும்பில் உள்ள சுகாதார நிலையங்களுக்கு விஜயம் செய்யவுள்ளனர்.



# சம்பள உயர்வு கோரி கொட்டகலயில் போராட்டம்



(க.கிஷாந்தன்)

தோட்டத் தொழிலாளர்களுக்கு காலம் தாமதிக்காத சம்பள உயர்வை அரசாங்கம் மற்றும் சம்மந்தப்பட்ட அமைப்புகளின் அதிகாரிகள் பெற்றுக்கொடுக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். சம்பள உயர்வு இன்றி வாழ்வாதாரத்தில் பாதிக்கப்படும் தோட்டத்தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் பிள்ளைகள் மந்த போஷனத்தினால் பாதிக்கப்பட்டு வருகின்றார்கள்.

தோட்டத்தொழில் நடவடிக்கை மற்றும் பாடசாலையின் கல்வி நடவடிக்கை வர்த்தகர்களின் வியாபார நடவடிக்கை என்று இன்னும் பல விடயங்கள் சம்பள உயர்வு இன்றி தொழிலாளர்கள் வாழ்வதால் முற்றிலும் பாதிக்கப்பட்டு வருவதாக வலியுறுத்தியும், சம்பந்தப்பட்டவர்களுக்கு அழுத்தம் கொடுத்தும் சர்வோதய அமைப்பு மற்றும் சிவில் அமைப்புகள், ஜே.வி.பியின் ஆசிரியர் அமைப்பு, தோட்டத் தொழிலாளர்கள் கொட்டகலை வர்த்தக சங்கம் ஆகியவற்றின் ஆதரவுடன் சாத்வீகமாக தெளிவூட்டும் போராட்டம் இடம்பெற்றது.

கொட்டகலை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய முன்றலில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் 250 ற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இதில் ஆலய வழிபாடு மற்றும் சம்பள உயர்வை வலியுறுத்திய வீதி நாடகம் போன்றவை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை கொட்டகலை நகர வர்த்தகர்கள் தங்களின் வர்த்தக நிலையங்களை ஒரு மணிநேரம் அடைத்து இந்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தனர். மேலும் தம்புள்ள பத்தனை பொலிஸார் இப்போராட்டத்திற்கான பாதுகாப்பு வழங்கினார்கள்.

# வழக்குத் தவணைகளுக்கு சமுகமளிக்காதவர் விளக்கமறியலில்

(எப். முபாரக்)

திருகோணமலை பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் கடல்மார்க்கமாக அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முற்பட்ட ஒருவர் ஐந்து வழக்குத் தவணைகளுக்கு சமூகமளிக்காதமையினால் அடுத்த மாதம் 1 ஆம் திகதி வரை அவரை விளக்க மறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்ற நீதிவான் எல்.ஜி.விஸ்வானந்த பெர்ணாண்டோ நேற்று வெள்ளிக்கிழமை (22) உத்தரவிட்டார். திருகோணமலை தேவ நகர் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய ஒருவரே விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். சந்தேக நபர் கடந்த 2013 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் கடல்மார்க்கமாக அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட போது கடற்படையினரால் கைது செய்யப்பட்டு திருகோணமலை பொலிஸாரினால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

ஐந்து வழக்குத் தவணைகளுக்கு சமுகமளிக்காது இருந்த நிலையில் வியாழக்கிழமை (21) கைது செய்து வெள்ளிக்கிழமை (22) பொலிஸார் திருகோணமலை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்திய போதே விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். சம்பவம் தொடர்பான விசாரணைகளை திருகோணமலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பிள்ளையானின் பிணை மனு மறுப்பு

(கொழும்பு)

நேற்று மட்டக்களப்பு நீதிமன்றத்தில் பிள்ளையான் சம்பந்தமான வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்பொழுது மட்டக்களப்பு நீதிமன்றம் பிள்ளையான் என்று அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனின் பிணையை வழங்க மறுத்துவிட்டது.

இந்த வழக்கு மீண்டும் செப்ரெம்பர் 1 ஆம் திகதி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

# ஜெர்மனியில் துப்பாக்கிச் சூட்டில் 10 பேர் பலி:

ஜெர்மனி நாட்டில், மியூனிச் நகரில் அமைந்துள்ள ஒலிம்பியா வணிக வளாகத்தில் புகுந்த துப்பாக்கி ஏந்திய பயங்கரவாதி, அங்கு கூடியிருந்தவர்களை நோக்கி கண்மூடித்தனமாக சுட்டதில் 10 பேர் பலியானதாகவும், துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்டவன் தன்னைத் தானே சுட்டுக் கொண்டு தற்கொலை செய்து கொண்டதாகவும் ஜெர்மன் பொலிஸார் தெரிவித்துள்ளனர். முன்னதாக இத்தாக்குதலில் குறைந்தபட்சம் மூன்று பயங்கரவாதிகள் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டது.


பொலிஸ் உயரதிகாரி ஹூபர்டஸ் ஆன்டிரே செய்தியாளர்களிடம் விளக்கம் அளித்த போது, வணிக வளாகத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் இதுவரை 10 பேர் பலியாகி உள்ளனர். 21 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். உயிரிழந்தவர்களில் தாக்குதல் நடத்தியவனும் ஒருவன். துப்பாக்கிச் சூடு நடத்தியவர் யார் என அடையாளம் காணப்பட்டுள்ளது. அவர் 18 வயதான ஜெர்மன்-ஈரானை சேர்ந்தவர். இந்த தாக்குதலுக்கான நோக்கம் என்னவென்று சரியாக தெரியவில்லை.

# ரொட்டிக் கடையின் சுவரில் வசீகரிக்கும் கபாலி!

(மலேஷியா)

திரும்பிய திசையெங்கும் ரஜினிகாந்தின் கபாலியின் தாக்கம்தான்.... மலேசியாவின் பினாங்கு நகரின் புகழ்பெற்ற சுவர் ஓவியத்திலும் அச்சு அசல் கபாலி அசத்துகிறார்... பினாங்கு நகரத்தில் உள்ள டிரான்ஸ்பர் சாலையில் "நைனா ரொட்டி பர்கர் கடையில்" ரஜினிகாந்தின் கபாலி தோற்றம் வரையப்பட்டுள்ளது.

வெள்ளைத் தாடி சகிதம் வெள்ளை நிற கோர்ட்டுடன் ரஜினிகாந்த் பாதி வெந்த முட்டையோடு ரொட்டி பர்கர் சாப்பிடுவது போல அந்த ஓவியம் வரையப்பட்டுள்ளது. நாம் சாப்பிடும்போது ரஜினி அருகே அமர்ந்திருப்பது போன்ற உணர்வைத் தருகிறது அந்த ஓவியம். இச்சித்திரத்தை வரைந்தவர் அஸ்மி உசேன். இவரும் ரஜினியின் தீவிர ரசிகர்தானாம்.



# அரசகேசரியின் பதில்கள்



**கேள்வி: யாழ் பல்கலைக்கழக மோதல் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

**சி. அமுதன், மட்டக்குழி.**

பதில்: அமைதியாக போய்க் கொண்டிருக்கும் குடாநாட்டைக் குழப்புவதற்காக சில விஷமிகள் திட்டமிட்டடு செய்த சதி. மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும். தமிழ் தேசிய கூட்டமைப்பு இதனை வன்மையாகக் கண்டித்து சிங்கள மாணவர்கள் கல்வியை தொடர அழைப்பு விடுத்துள்ளது.

**கேள்வி: இராணுவப் புரட்சியை அடக்கிய துருக்கி மக்களின் வீரம் எத்தகையது?**

**ஆ. யோகேஸ்வரன், திருகோணமலை.**

பதில்: முதலில் நாம் சமூக வலைத் தளங்களுக்கு நன்றி சொல்ல வேண்டும். இராணுவப்புரட்சிக்கு எதிராக மக்களை ஒன்று கூடுமாறு துருக்கி ஜனாதிபதி வேண்டுகோள் விடுத்தார். ஜனாதிபதியின் வேண்டுகோள் பிரகாரம் இராணுவப் புரட்சியை முறியடித்தார்கள். துருக்கி மக்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

**கேள்வி: யாழ்ப்பாணத்தில் சர்வதேச கிரிக்கட் மைதானம் சாத்தியமா?**

**க. நிமலன், பருத்தித்துறை.**

பதில்: சாத்தியமே. திலங்க சுமதிபால சொன்னதை செய்பவர். அவர் தம்புள்ளயில் கிரிக்கட் மைதானத்தை 200 நாட்களில் கட்டி முடித்த பெருமைக்குரியவர். யாழ் சர்வதேச கிரிகட் அரங்கை இராணுவத்தின் எந்தவித தலையீடும் இன்றி பொது மக்களின் ஒத்தழைப்புடன் கட்டப்போவதாக எமக்குக் கூறினார். அவரை நூற்றுக்கு நூறு வீதம் நம்பலாம்.

**கேள்வி: சுவாதி கொலையை விட விசாரணை மர்மமாக இருக்கிறது. என்ன காரணம்?**

**த. ராகுலன், ஓமந்தை.**

பதில் : பெரிய மனிதர்களின் குறுக்கீடு தான் காரணம்.

**கேள்வி: கபாலி ஜுரம் எப்போது குறையும்?**

**அ. பிரமிளா, விசுவமடு.**

பதில் : படம் வெளியானதும் முடிந்து விடும். கிழவனான ரஜினியின் படம் வந்ததும் வெட்ட வெளிச்சமாகி விடும். படத்தை இன்றைய ரசிகர்கள் திரும்பி பார்க்க மாட்டார்கள்.

**கேள்வி: திருட்டு விசிடியை ஒழிக்க மாட்டார்களா?**

**க. ரகுவரன், கைதடி.**

பதில் : மிகவும் கஷ்டம். படத்தின் உரிமையை வெளிநாட்டுக்கு விற்று விடு வார்கள். அங்குதான் திருட்டு விசிடி தயாராகின்றதாம்.

**கேள்வி: செய்திகளை விட வேகமாக பரவும் வதந்திகளை மக்கள் நம்பக் காரணம் என்ன?**

**எஸ். யோசப், மன்னார்.**

பதில்: வதந்திகளின் உண்மை தன்மை இருக்கும் என்ற ஆர்வம் தான் காரணம்.

**கேள்வி: மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளி சிறையில் இருந்த படி போதைவஸ்து வியாபாரம் செய்கிறாராம். இது யாருடைய தவறு?**

**சி. சிவநாதன், கிளிநொச்சி.**

பதில்: அரசாங்கத்தின் தவறு.

**கேள்வி: பௌத்தர்கள் இல்லாத இடங்களில் திடீர் என வைக்கப்படும் புத்தர் சிலைகளால் யாருக்கு இலாபம்?**

**உ. மகேஸ்வரன், கொடிகாமம்.**

பதில் : இலங்கை அரசியல் சட்டத்தில் இது பௌத்த நாடு என கூறப்பட்டுள்ளது. எனவே பௌத்த நாடாக காட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**அரசியல், சினிமா, விளையாட்டு சம்பந்தமான உங்கள் கேள்விகளை தபால் அட்டையில் எழுதி அனுப்பவும்.**

*கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி*

**அரசகேசரி**
**தினச்செய்தி**
*தில்லைகட்டிவீதி,*
*சுன்னாகம்.*

# வடக்குகிழக்கு மாகாணங்களில் பத்து பனங்கைப்பணிக் கிராமங்கள்




சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் நிதி



ஒதுக்கீட்டின்கீழ் பத்து பனங்கைப்பணிக் கிராமங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பனங் கைப்பணித் தொழிலில் ஆர்வமுள்ள பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கும், கணவனை இழந்த பெண்களுக்கும், வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற குடும்ப பெண்களுக்கு சுய தொழில் வாய்ப்பினையும் வருமானத்தை ஈட்டுவதற்கும் பனை சார் வளங்களை உச்சமாகப் பயன்படுத்துவதற்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டுள்ளதென சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார்.

கடந்த மே மாதத்தில் மட்டக் களப்பில் பண்டாரியாவெளிக் கிராமத்தில் 110 பெண்களுக்கும், திருகோணமலையில் குச்சவெளி மற்றும் தம்பலகாமம் பிரதேச செயலகப் பிரிவின் வாழை யூற்று, இறக்ககேணி மற்றும் உட்பட்வேல ஆகிய கிராமங்களில் 90 பெண்களுக்கும், அம்பாறையில் அட்டாளைச் சேனை பிரதேச செயலகப் பிரிவின் ஒலுவில் மற்றும் வாழை முனைக் கிராமங்களில் 40 பெண்களுக்கும், வவுனியா வடக்கு பிரதேச செயலகப் பிரிவில் ஒயார் சின்னக்குளம் கிராமத்தில் 32 பெண்களுக்கும், முல்லைத்தீவில் முள்ளியவளை பிரதேச செயலகப் பிரிவில் மாமூலைக் கிராமத்தில் 30 பெண்களுக்கும், கிளிநொச்சியில் கராச்சி பிரதேச செயலகப் பிரிவில் வன்னேரிக்குளம் கிராமத்தில் 50 பெண்களுக்கும், புத்தளத்தில் தம்பவன்னி கிராமத்தில் 60 பெண்களுக்கும், மன்னாரில் பாழைப்பெருமாள்கட்டு கிராமத்தில் 45 பெண்களுக்கும், யாழ்ப்பாணத்தில் வேலணை பிரதேச செயலகப் பிரிவின் புங்குடுதீவில் 46 பெண்களுக்கும் மொத்தமாக 503 குடும்பங்கள் இத் திட்டத்தின் கீழ் பயனாளிகளாக உள்வாங்கப் பட்டுள்ளனர் என அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார்.

இவர்களுக்கு 6 மாதகால கைப்பணிப் பயிற்சி பனை அபிவிருத்திச்சபையினால் வழங்கப்படுவதுடன் உபகரணப் பொதிகளும் வழங்கப்படும். இவர்களது உற்பத்திப் பொருட்கள் சிறு சுவடுகள் கட்டமைப்பின் கீழ் பனை அபிவிருத்திச் சபையினால் கொள்வனவு செய்யப்படும். இந்த பயிற்சித் திட்டத்தின் கீழ் நவீன வடிவமைப்பிலான



கைப்பைகள், சுளகு, கூடைகள், நீத்துபெட்டி, பனைஓலையுடன் தோற்பொருட்களை இணைத்து செய்யப்படும் கோவைகளை வைப்பதற்கான பைகள் போன்ற கைவினைக் கைப்பணிப் பொருட்களிற்கான பயிற்சிகளும், தொழில்நுட்ப கருத்தரங்குகளும் தற்போது இடம்பெற்று வருகின்றன.

பனங்கைப்பணி கிராமங்களை கட்டியெழுப்புகின்ற இந்நிகழ்ச்சித் திட்டம் பனைவளப் பயன்பாட்டினை உச்சப் படுத்துவதுடன் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கும் கண வனை இழந்த பெண்களுக்கும் வாழ்வாதாரத்தை ஏற்படுத்துவதுடன் சுய தொழில் முயற்சிகளையும் கைவினைக் கைப்பணி முயற்சிகளையும் விரிவாக் கும் வேலைத்திட்டமாகவும் அமையும் என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள் குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச் சின் செயலாளர் வே.சிவ ஞானசோதி தெரிவித்தார்.

# அறுநூறு கத்தோலிக்கர்களை சிரச்சேதம் செய்த சங்கிலி மன்னன்

சுமார் அறுநூறு கத்தோலிக்கர்களை மன்னாரில் சிரச்சேதம் செய்த சங்கிலி மன்னன் 1517 ஆம் ஆண்டு தமிழ் ராஜ்ஜியமான யாழ்ப்பாண மன்னனாக முடிசூடிக்கொண்டான். ஆட்சிக் கட்டிலில் ஏறிய பின்னர் செகராசசேகரன் என்ற பெயரைச் சூட்டிக்கொண்டு 1561 ஆம் ஆண்டு வரை ஆட்சி புரிந்தான்.



சங்கிலிமன்னன் அவன் காலத்தில் போர்த்துக்கேயரின் வர்த்தக நடவடிக்கைகளை வெறுத்தான். தீவிர இந்துவான சங்கிலி தனது நாட்டில் இருந்த தமிழ் மக்கள் மதம் மாறுவதை மூர்த்தண்ணியமாக எதிர்த்தான்.

போத்துக்கேயர்கள் மன்னாரில் தமிழ் மக்களை மதம் மாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார்கள் மன்னாரில் மீன் பிடிக்கும் மக்களை (கரையார்) போர்த்துக்கேசியர் கத்தோலிக்க மதம் மாற்றினார்கள்.

இந்து சமயத்தைச் சேர்ந்த தமிழ் மக்கள் மதம் மாறுவது தனது நாட்டிற்கு பாதிப்பு ஏற்படுத்தும் என்பதை உணர்ந்த சங்கிலி மதமாற்றத்துக்கு எதிராக நடவடிக்கை எடுத்தான். அந்தக் காலத்தில், பரிசுத்த பிரான்ஸிஸ் சேவியர் என்ற போர்த்துகேய மதகுரு மதமாற்ற நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தார்.

மதமாற்றத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்த சங்கிலி 1544 ஆம் ஆண்டு 5000 தமிழ்த் துருப்புகளை மன்னாருக்கு அனுப்பி வைத்தான். கத்தோலிக்க மதத்துக்கு மாறிய அனைவரையும் திரும்ப இந்து மதத்துக்கு வரும்படி சங்கிலியன் உத்தரவிட்டான். தனது உத்தரவுக்குக் கீழ்ப்படியாத சுமார் 600 கத்தோலிக்க மீனவரை சங்கிலி மன்னன் சிரச்சேதம் செய்தான். பரிசுத்த பிரான்ஸிஸ் சேவையரின் சீடனும் உத்தியோகத்தவரான இளம் சிங்கமும் சிரச்சேதம் செய்யப்பட்டனர். இந்து மதத்தைச் சேர்ந்த எவரும் கத்தோலிக்க மதத்துக்கு மாறக்கூடாது என சிரச்சேதம் மூலம் சங்கிலி எச்சரிக்கை செய்தான்.

சங்கிலி மன்னனின் தந்தையான சிங்க பரராஜசேகரனுக்கு சிங்கபாகு, பண்டாரம், பரநிருபசிங்கம், சங்கிலியன் என நான்கு ஆண்களும் ஒரு பெண்ணுமாக ஐவர் இருந்தனர். சங்கிலி அரச குடும்பப் பெண்ணுக்குப்பிறக்கவில்லை. எனவே தனக்கு முன் அரியாசனம் ஏறிய சிங்க பாகு பண்டாரம் ஆகிய இருவரையும் சூழ்ச்சியால் கொன்றான். அச்சமயம், 3 ஆவது மகனான பரநிருபசிங்கம் கண்டிக்குச் சென்றமையால் தப்பிவிட்டார். தந்தையைப் புறக்கணித்து 1517 ஆண்டு யாழ்ப்பாண இராஜ்ஜிய அரியாசனத்தில் ஏறினான்.

அதையடுத்து மதம் மாறிய 600 கத்தோலிக்க மதத்தவர்களைச் சிரச் சேதம் செய்த சங்கிலியனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு பரிசுத்த பிரான்ஸிஸ் சேவியர் கோவாவில் உள்ள போர்த்துக்கேய ஆட்சியை நிர்ப்பந்தித்தார். கத்தோலிக்கர்களை சங்கிலியன் சிரச்சேதம் செய்ததை அறிந்த போர்த்துக்கேய மன் னன் அதிர்ச்சியடைந்தார். ஆனால் சங்கிலிக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதை போர்த்துக்கேய வர்த்தகர்கள் கடுமையாக எதிர்த்தனர்.

இந்த சமயம் யாழ்ப்பாணத்துக்கு வந்த பரநிருபசிங்கம் தனக்கு ஆட்சி கிடைக்க உதவி செய்யுமாறு போர்த்துக்கேயரிடம் வேண்டுகோள் விடுத்தான். மேலும் பரநிருபசிங்கம் கத்தோலிக்க மதத்துக்கு மாறினார். போர்த்துகேயரால் யாழ்ப்பாண இராஜ்ஜியத்தைக் கைப்பற்றி பரநிருபசிங்கத்துக்குக் கொடுக்க முடியவில்லை. மன்னாரில் தொடர்ந்து போர்த்துக்கேய நிலைகளை வடக்கு துருப்புகள் (வடுகத் துருப்பினர்) தாக்கினர். கோவாவில் வைஸ்ரோயாக (இராஜ பிரதிநிதி) இருந்த டொம் கொன்ஸ்ரான்ரினோ தா பிரசட்ஸா 1558 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றத் திட்டமிட்டான்.

பிரசட்ஸா 1200 துருப்புகளுடன் 1560 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி மரக்கலங்களில் யாழ்பாணம் வந்து கொழும்பு துறையில் நங்கூரமிட்டான். மறு நாள் நல்லூர் கோட்டையை நோக்கி பிரட்ஸாவின் படை நகர்ந்தது.

சங்கிலியின் தளபதிகள் போர்த்துகேய படையினரை எதிர்த்து சங்கிலிய மன்னனின் படையிடம் வாள்,ஈட்டி போன்ற ஆயுதங்களே இருந்தன. ஆனால் போர்த்துக் கேயர் வைத்திருந்த துப்பாக்கி போன்ற நவீன ஆயுதங்களை எதிர்த்து அவர் களால் போரிட முடியவில்லை. அதை யடுத்து சங்கிலி மன்னை நல்லூரில் இருந்து கோப்பாயை நோக்கி பின்னோக்கி நகர்ந்தான். நல்லூரைக் கைப்பற்றிய போர்த்துகேய படைகள் அங்கே காணப்பட்ட பெறுமதி மிக்க பொருட்களைச் சூறையாடின. போர்த்துகேய இராணுவம் கோப்பாய்க்குச் சென்றது. ஆனால் சங்கிலி மன்னன் பச்சிலைப்பள்ளிக்குச் சென்றார். இறுதிவரை சங்கிலி மன்னனைக் கைது செய்ய முடியவில்லை.




சங்கிலி மன்னன் நல்லூரில் இருந்து பின்வாங்கியபோது அங்குள்ள தானியக் களஞ்சியங்களைத்தீயிட்டுக்கொளுத்திவிட்டு தான் சென்றான். அதனால் போர்த்துகேய படைகளுக்கு உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டது. அதையடுத்து போர்த்துக்கேய படைத் தளபதி டொம் கொன்ஸ்ரான்ரினோ தா பிரசட்ஸா, சங்கிலி மன்னனுடன் போர் நிறுத்த ஒப்பந்தம் செய்தான். அந்த ஒப்பந்தத்தின்படி திறையாக ஆண்டு தோறும் 12 கொம்பன் யானைகளையும் 1200 பதக்குப்பணமும் தர சங்கிலி ஒப்புக் கொண்டான். இந்த ஒப்பந்தத்தின் மேலும் முக்கிய அம்சம் என்னவென்றால் யாழ்ப்பாண இராஜ்ஜியத்தை சங்கிலி மன்னன் ஆட்சி செய்யலாம். சுற்றியுள்ள தீவுகளும் மன்னாரும் போர்த்துக்கேயரின் கட்டுப்பாட்டில் இருக்கும். மதம் மாறுபவர்களைத் தடுக்கக்கூடாது. வேண்டுமானால் அவர்களிடம் வரி வசூலிக்கலாம் என்பதும் அந்த ஒப்பந்தத்தின் பிரதான அம்சங்களாகும்.





இன்று நல்லூர் முத்திரைச் சந்தியில் சங்கிலி மன்னனின் சிலை நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்த சிலை ஏற்கனவே 70 களில் அன்று யாழ் மேயர் அல்பிரட் துரையப்பாவினால் நிர்மாணிக்கப்பட்டது என்பது குறிப்பிடதக்கது.



# சொன்னார்கள் சொன்னார்கள்



இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் மற்றும் அவர்களது படகுகளை விடுவிக்க இந்திய மத்திய அரசாங்கம் விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்துள்ளார்.



வவுனியாவில் அமைக்கப்படவுள்ள பொருளாதார மத்திய நிலையம் தொடர்பில் முதலமைச்சரே முடிவு எடுப்பார் என எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.



எழுபது மில்லியன் ரூபா மோசடி செய்தது தொடர்பில் நாமல் ராஜபக்ஷ எம்.பிக்கு எதிராக போதிய ஆதாரங்கள் உள்ள நிலையிலே அவர் கைதுசெய்யப்பட்டிருப்பதாக பிரதி அமைச்சர் அஜித் பி. பெரேரா தெரிவித்தார். அவர் தங்களிடம் பணம் கேட்டதை கிரிஷ் நிறுவனமும் தமது வங்கிக் கணக்கில் பணம் வைப்பு செய்ததை ரோயல் செரமிக் உரிமையாளரும்ஏற்றுக் கொண்டுள்ளதாகவும் நாமல் ராஜபக்ஷ கூறியுள்ளவாறு குறித்த பணம் 2013 இல் நடந்த "சுப்பர் 7 ரக்பி" போட்டிக்கு வழங்கப்படவில்லை என்பதும் ஆதாரபூர்வமாக உறுதியாகியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.



"முன்வைத்த காலை பின் வைப்பவன் நானல்ல" என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கிளிநொச்சியில் தெரிவித்தார். தேர்தல் விஞ்ஞாபனத்தில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகள் அனைத்தையும் நிறைவேற்ற அர்ப்பணித்துள்ளதாகத் தெரிவித்த ஜனாதிபதி வடக்கு மக்களுக்குப் பிரச்சினை உள்ளது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வது அவசியம் என்றும் தெரிவித்தார்.

ராஜபக்ஷ குடும்பத்தில் யாராவது ஒருவர் சிறையில் இருக்க வேண்டும். அப்போது தான் மைத்திரி - ரணில் ஜோடிகளுக்கு நித்திரை போகும். ராஜபக்ஷ குடும்பத்தில் ஒருவராவது வெளியில் இருந்தால் இவர்களுக்கு தூக்கம் வராது. எனவே ராஜபக்ஷ என்ற பெயரைக் கொண்ட விஜயதாஸ ராஜபக்ஷவும் வெகு சீக்கிரத்தில் கைதாகலாம் என பாராளுமன்ற உறுப்பினர் விமல்வீரவன்ச தெரிவித்தார்.






மகிந்த ஆட்சியைப் போன்றே மைத்திரி ரணில் கூட்டு ஆட்சியும் மக்களைப் பாதிக்கின்ற வகையில் சட்டத்தையும் நீதித் துறையையும் மீறி தான்தோன்றித்தனமாக செயற்பட்டு வருவதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

உயிர் காப்பது தர்மம். உயிர் எடுப்பது கர்மம். தர்மம் தலைகாக்கும் என்பார்கள் நீதிமன்ற தர்மம் ஆடுகளின் தலைகளைக் காக்கட்டும் என தெரிவித்துள்ள யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன், ஆலயங்களின்வேள்விகளில் மிருக பலி கொடுப்பதைத் தடுக்கும் இடைக்காலதடை உத்தரவை எதிர்வரும் 11.08.2016 ஆம் திகதி வரை நீடித்துள்ளார்.




யாழ். பல்கலைக்கழக மோதல் குறித்து ஆராய பல்கலைக்கழக நிர்வாகக் குழுவொன்றை நியமித்து சம்பவம் தொடர்பில் நாட்டின் சட்டம் நீதி முறைமைகளுக்கு அமைய பொலிஸ் மட்டத்தில் விசாரணைகளை மேற்கொள்ளப்படும். இந்தசெயற்பாட்டின் ஊடாக குற்றவாளிகள் தண்டிக்கப்படுவார்கள் என வடமாகாண ஆளுநர் ரெஜினோல் குரே தெரிவித்தார்.



# அட அப்படியா?


**- ராஜேஷ் மணாளன் -**

## அதிசயமானபூ



இந்தப் பூவின் பெயர் Raffelsia. உலகில் காணப்படும் அரிய, பெரிய பூக்களில் இதுவும் ஒன்று. இலைகள் இல்லாத இந்த இராட்சத பூ குருவிச்சை போல் ஒட்டுண்ணி இனத்தைச் சார்ந்தது. அடி மரங்களில் வெடிப்பு ஏற்பட்டால் அங்கு வளர ஆரம்பித்துவிடும். இந்தப் பூ பெரிதாக மலரும்போது அழுகிய மாமிச வாடை சுற்று வட்டாரத்தில் அதிகமாக இருக்கும்.

## ரம்புட்டான்



றம்புட்டான் வியாபாரம் சிறீலங்காவில் ஓஹோவென்றிருக்கின்றது. இது தெற்கு ஆசிய நாடுகளுக்குரிய ஒரு பழம். 13ம் நூற்றாண்டளவில் அரபு வர்த்தகர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. றம்புட்டான் என்பது ஒரு மலாயா-இந்தோனீசிய பெயர்.


இது Lychee என்ற பழத்தின் குடும்பத்தைச் சார்ந்தது.

## மாமிசவாடை



பத்து அடி வரை உயரமாக வளரும் இன்னொரு அதிசயமான, மிக அரிதான இராட்சத பூதான் Corpse Lilly என்று அழைக்கப்படுகின்றது. Borneo தீவில்தான் இதை நீங்கள் காணமுடியும். ஒவ்வொரு பத்துவருடங்களுக்கு ஒருதடவை இது பூக்கும் என்பது இன்னொரு புதுமையான விடயம். 12 மணி நேரம் பூத்திருக்கும் இந்த மலரின் வாடை அருவருப்பானது. பிணவாடை அடிக்கும். மாமிசம் போன்று தோற்றமளிக்கும் இதன் இதழ்கள் பூச்சிகளால் கவரப்பட்டு மகரந்தச்சேர்க்கை இடம்பெற வேண்டும் என்பதற்காகவே இப்படி ஒரு படைப்பு.

## பிணவாடை



இந்தச் செடியின் பெயர் என்ன தெரியுமா? Beehive Ginger Plant என்பதுதான் இதன் பெயர். பூக்கள் சிறிதாக இருந்தாலும் ஆறு அடி உயரம்வரை வளரக்கூடிய செடி இது. மரத்தில் இருந்து பூ வெட்டப்பட்டாலும் பல நாட்கள் தொடர்ந்து இந்தப் பூ வாடாது வண்ணமயமாக இருக்கும்.

# அரசியல் அரங்கில் புதிய திருப்பங்கள் : திம்பு பேச்சு வார்த்தை தோல்வி

திம்பு பேச்சுவார்த்தை முடிவடைந்த பிற்பாடு, இலங்கையில் ஆங்காங்கே கலவரம் வெடித்துக் கொண்டே இருந்தது.

ஆழ்த்தியது. இவ்வாறு நாடுகடத்தல் விடயங்கள் எல்லாம் நடைபெறுகின்ற பொழுது எங்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது என்று



## போராளி பிரதிநிதிகள் நாடு கடத்தல்

### இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டுக்கொலை

யாழ்ப்பாண ரயில் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. போராளிக் குழுக்களால் ரயில் இஞ்சின்கள் கடத்தப்பட்டன. குழப்பங்கள் காணப்பட்டதால், இந்திய அரசாங்கம் சந்திரஹாசனை நீங்கள் இரண்டு மாதம் நியூயோக்கில் தங்கிவிட்டு மீண்டும் இந்தியா வாருங்கள் என்று கூறியது. ஆனால் அதனை சந்திரஹாசன் ஏற்க மறுத்துவிட்டார்.

மேலும் சந்திரஹாசன் பொஸ்ரன் விமான நிலையத்தில் இருந்து விமானம் ஏறி இந்தியாவின் மும்பை விமான நிலையத்திற்கு ஆகஸ்ட் 26 ஆம் திகதி வந்தடைந்தார். மும்பை விமான நிலையத்திற்கு வந்து இறங்கிய சந்திரஹாசனை விமான நிலையத்தை விட்டு வெளியே போக அனுமதிக்கவில்லை. அவர் 3 நாட்கள் விமான நிலையத்தினுள்ளே இருந்தார். அதையடுத்து சென்னை செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

அதே நேரம், லண்டன் சென்ற பாலசிங்கம் அங்கே இருந்தார். லண்டனில் இருந்த பாலசிங்கம், இந்திய உயர் அதிகாரிகள் மீது அசைக்க முடியாத நம்பிக்கை இருக்கிறது என்றும் அவர்களின் முயற்சிக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்றும் ரெலெக்ஸ் மூலம் செய்தி அனுப்பினார். ஆனால் வெளிவிவகார அமைச்சு அவரின் தகவலை ஏற்க மறுத்துவிட்டது.

பாலசிங்கத்தை நாடு கடத்தும் உத்தரவு பகிரங்கமாக அறிவிக்கப்பட்ட ஒன்றாகும். நாட்டின் நலன் கருதி இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. நாட்டின் நலன் என்று

என்று பேசினார்.

இந்த அறைகூவல், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி இந்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருக்கின்ற போது வெளிவந்தது. இவ்வாறு ஜனாதிபதி யுத்த பிரகடனம் செய்வது போல் பேசியதை அடுத்து மட்டக்களப்பு திருக்கோயில் கிராமத்தில் வைத்து இலங்கை படையினர் 26 மக்களை சுட்டு கொன்றார்கள்.

இறந்தவர்கள் எல்லோரும் போராளிகள் என்று பொலிஸார் சொன்னார்கள். ஆனால் அவர்கள் விவசாயிகளும், கூலித் தொழிலாளிகளும் என ஈரோஸ் இயக்கம் அறிவித்தது. அதையடுத்து ஆகஸ்ட் 27 ஆம் திகதி திருகோணமலை கடற்படை முகாமிற்கு அருகில் நிலக் கண்ணி வெடி வெடித்ததில் 6 கடற்படையினரும் ஒரு பெண்மணியும் இறந்தார்கள். அந்த சமயம் இலங்கை அரசாங்கம் சார்பில் திம்பு பேச்சுவார்த்தைக்குத் தலைமை வகித்த ஜனாதிபதி ஜெவர்த்தனாவின் சகோதரர் ஹரி ஜெவர்த்தனா டெல்லி சென்று அங்கே இந்திய அரசினர் தயாரித்த திம்பு பேச்சுவார்த்தை குறிப்பில் கையெழுத்திட்டார். அவர் விருப்பம் இல்லாமல் அந்த அறிக்கையில் ஒப்பமிட்டார் என்று தெரிய வந்தது.

அந்த சந்தர்ப்பத்தில் தான் விரும்பியபடியே விடயங்கள் எல்லா நடைபெறுகின்றது என்று குறிப்பிட்டு இந்திய பிரதமர் ராஜீவ்காந்தி மகிழ்ச்சி அடைந்தார்.

அந்தக் கட்டத்தில், ஒரு மர்மமான இரட்டைக்கொலை ஒன்று நிகழ்ந்தது அந்த கொலையில் இரண்டு தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம். ஆலாலசுந்தரமும்,

## பிரபாகரனின் வாழ்க்கை வரலாறும் சமகால நிகழ்வுகளும்

அதே நேரத்தில் பேச்சுவார்த்தை தோல்வி அடைந்ததை இந்தியாவால் ஜீரணிக்க முடியவில்லை.

பேச்சுவார்த்தை முடிவடைந்த சிலமணி நேரத்துக்குள் இந்திய மத்திய அரசு அன்ரன் பாலசிங்கம், சத்தியேந்திரா, சி.எஸ். சந்திரஹாசன் ஆகியோரை நாடு கடத்தும் உத்தரவை பிறப்பித்தது. சந்திரஹாசன் செல்வநாயகத்தின் மகன் ஆவார். அவர் ரெலோவுடன் கொஞ்சம் நெருக்கமாக இருந்தவர் என்பது குறிப்பிடதக்கது.

அன்ரன் பாலசிங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சாளர். சத்தியேந்திரா ரெலோவின் பேச்சாளராக இருந்தவர். திம்பு பேச்சுவார்த்தை குழப்பத்தில் முடிவடைந்த பின் அவர் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டார்.

நாடுகடத்தும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை அடுத்து தமிழ் நாட்டு பொலிஸார் சந்திரஹாசனையும் பாலசிங்கத்தையும் பிடித்து குடிவரவு, குடிஅகல்வு காரியாலயத்தில் கொண்டு போய் ஒப்படைத்தார்கள். அவர்கள் இருவரும் 48 மணித்தியாலத்தில் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என குடிவரவு, குடிஅகல்வு திணைக்களம் உத்தரவிட்டது.

மறு நாள் இங்கிலாந்து பிரஜையான அன்ரன் பாலசிங்கம் இங்கிலாந்து கடவுச்சீட்டு வைத்திருந்ததால் அவரை எயார் இந்தியா விமானத்தில் ஏற்றி இங்கிலாந்திற்கு அனுப்பி விட்டார்கள். அதே நேரம் சந்திரஹாசனுக்கு அமெரிக்கா சென்று வர அவருக்கு கடவுச்சீட்டும் விசாவும் இருந்தபடியால் அவரை நியூயோர்க் நகரம் செல்லும் விமானத்தில் ஏற்றிவிட்டார்கள்.

இவைகள் எல்லாம் திடீர் திடீர் என்று நடைபெற்று எல்லோரையும் அதிர்ச்சியில் இலங்கை அரசாங்க பேச்சாளர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் கூறினார்.

இவ்வாறு சம்பவங்கள் எல்லாம் நிகழ்கின்ற போது ஈழம் தேசிய இடதுசாரி முன்னணியின் தலைவர்கள் பதுங்கிக் கொண்டார்கள். அதே நேரத்தில் எதிர்க் கட்சிகளில் ஒன்றான தி.மு.க. ராஜீவ் காந்தியைக் கண்டித்து வீதி நெடுகிலும் ஊர்வலங்கள் நடத்தியது. முதல் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தி.மு.க. வினால் நடத்தப்பட்டது.

இவ்வாறான விசயங்கள் தமிழ் நாட்டில் நடைபெற்றுக் கொண்டிருந்த பொழுது

**அரசகேசரி**

நியூயோர்க் நோக்கி பறந்து கொண்டிருந்த சந்திரகாஹன் மேலும் பரபரப்பான நிகழ்ச்சியை உருவாக்கிக் கொண்டே இருந்தார். சீரான காலநிலை இல்லாததால் சந்திரஹாசன் பறந்த விமானம் நியூயோர்க் போக முடியாமல் இருந்தது. அந்த விமானம் பொஸ்ரன் நகரத்திற்கு திருப்பப்பட்டது.

"நான் இந்தியாவிற்கு எந்த துரோகமும் செய்யவில்லை. நான் மீண்டும் இந்தியாவிற்கு போக விரும்புகிறேன்." என்று சந்திரஹாசன் கூறினார். அமெரிக்காவில் வாழும் பெருந்தொகையான தமிழர்கள் பொஸ்ரன் விமான நிலையத்திற்குச் சென்று சந்திரஹாசனைச் சந்தித்தார்கள்.

அதே நேரத்தில் நூற்றுக்கணக்கானோர் இலங்கை ஜனாதிபதி ஜெவர்த்தனாவையும், இந்திய பிரதமர் ராஜீவ் காந்தியையும் கண்டித்து ஆர்ப்பாட்டங்கள் நடத்தினார்கள்.

ஆகஸ்ட் 26 ஆம் திகதி கொழும்பு -




எதனைக் குறிப்பிடுகிறார்கள் என்பதனை அவர்கள் வெளிக்காட்ட முன்வரவில்லை.

நாடு கடத்தும் உத்தரவு தொடர்ந்து அமுலில் தான் இருக்கும் என இந்திய வெளிவிவகார அமைச்சர் செப்ரெம்பர் 1 ஆம் திகதி குறிப்பிட்டார்.

அதையடுத்து மறைவிடத்தில் இருந்து வந்த பிரபாகரன் சென்னையில் பகிரங்கமாகத் தோன்றினார். அதே நேரம் இலங்கையில் தொடர்ந்து வஞ்சக செயல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

இலங்கையின் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆகஸ்ட் 24 ஆம் திகதி இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனா ஒரு பொது கூட்டத்தில் பேசும் போது "சமாதானம் என்றால் சமாதானம், யுத்தம் என்றால் யுத்தம்"



வி. தர்மலிங்கமும் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டார்கள்.

இந்தக் கொலையை ரெலோ இயக்கத்தினர்கள் செய்தார்கள் என்று பின்னர் தெரிய வந்தது. இன்று ரெலோவின் தலைவரான செல்வம் அடைக்கலநாதன் அன்று ரெலோவின் இராணுவத் தளபதியாக இருந்தவர் இவர் தான் இந்த கொலையை முன்னின்று செய்தார் என பின்னர் தகவல்கள் கசிந்தன.

அங்கே என்ன நடத்தது என்றால், செப்ரெம்பர் 2 ஆம் திகதி கோப்பாயில் உள்ள ஆலாலசுந்தரத்தின் வீட்டிற்கு இரண்டு இளைஞர்கள் சென்றார்கள் அவர்கள் தங்களுக்கு நற்சான்றிதழ் பத்திரம் வேண்டும் என்று ஆலாலசுந்தரத்திடம் கேட்டார்கள்.


(தொடரும் ....)

# சீனக்கடலில் ஒரு கச்சதீவு!

தமிழக மீனவனின் வாழ்வாதாரத்திற்காக, கச்சதீவிற்காக இலங்கையும் இந்தியாவும் மல்லுக்கட்டுகின்றன. ஆனால் வணிகப் பேராசையால் இரு தீவுக் கூட்டங்களை ஆக்கிரமிக்க 6 ஆசிய நாடுகள் மல்லுக்கட்டி வருகின்றன. தெற்கு சீனக் கடலிலுள்ள பாரசெல்ஸ் மற்றும் ஸ்ப்ராட்லிஸ் தீவுகளை சீனா, தைவான், வியட்நாம், பிலிப்பைன்ஸ், மலேசியா, புருனே ஆகிய 6 நாடுகளும் தங்களுடையது என்று சொந்தம் கொண்டாடுகின்றன. நடுவர் தீர்ப்பு நீதிமன்றம் சீனாவிற்கு எதிராக தீர்ப்பு வழங்கியுள்ள நிலையில் சீனாவும் அமெரிக்காவும் அப்பகுதியில் போர் விமானங்களையும் கப்பல்களையும் நிலை நிறுத்தியுள்ளதால், தெற்கு சீனக் கடல் பகுதியில் பெரும் பதற்றம் நிலவுகிறது.

தெற்கு சீனக்கடலில் அமைந்திருக்கும் மனிதர்கள் வாழாத இரு தீவுக் கூட்டங்கள் தான் பாராசெல் தீவுகளும், ஸ்ப்ராட்லிஸ் தீவுகளும். இத்தீவுகள் அமைந்திருக்கும் கடல் பகுதியில் கச்சா எண்ணெயும் எரிவாயும் அதிகம் கிடைக்கும். பவளத்திட்டுப் பாறைகள் நிறைந்த இப்பகுதியில் மீன் வளமும் அதிகம். மற்ற நாடுகளுக்குக் கடல் வழி வாணிபம் செய்ய இத்தீவுகள் பேருதவியாய் இருக்கின்றன.

அதனால் தான் சீனா, இத்தீவுகளில் கடற்படைத் தளங்களையும் துறைமுகங்களையும் ஏற்படுத்தி இத்தீவினை கட்டுக்குள் வைத்திருக்கிறது. '9 டேஷ் லைன்' எனப்படும் தனது எல்லைக் கோடால் 500 மைல் தொலைவிலிருக்கும் இத்தீவுகளையும் தனது பிரேதசமாக இணைத்துக் கொண்டுள்ளது சீனா.




ஆனால் வியட்நாமோ 17 ஆம் நூற்றாண்டிலிருந்து அப்பகுதிகள் தங்களின் கட்டுப்பாட்டில் உள்ளதாக மன்றாடுகிறது. 1940க்கு முன்னர் சீனாவுக்கும் அப்பகுதிகளுக்கும் சுத்தமாக எந்தத் தொடர்பும் இருந்தது இல்லை என்றும், அதன்பிறகு தான் சீனா அவ்விடங்களுக்கு உரிமை கொண்டாடுவதாகவும் வியட்நாம் கடுமையாகக் குற்றம் சாட்டுகிறது.

இந்தஇருநாடுகளுக்குமானபிரச்சினை சுமார் 40 ஆண்டு காலமாக நடைபெற்று வருகிறது. 1974 இல் பாராசெல்சில் நடந்த சண்டையில் 70 வியட்நாம் வீரர்கள் சீனர்களால் கொல்லப்பட்டனர். மீண்டும் 1988 இல் இவ்விரு நாடுகளும் மல்லுக்கட்ட 60 வியட்நாம் வீரர்கள் உயிர் நீத்தனர். ஆனால் இந்தச் சண்டை இவ்விரு நாடுகளோடு முடிந்து விடவில்லை.

இந்தத்தீவுகளைச்சார்ந்தஹ்யூங்யான் தீவு பிலிப்பைன்சிலிருந்து 100 மைல் தூரத்தில் அமைந்துள்ளது. ஆனால் சீனாவுக்கும் அத்தீவுக்குமான தூரம் 500 மைல்கள். அத்தீவுக்கு மிக அருகில் இருப்பதால் எங்களுக்கே சொந்தம் என்கிறது பிலிப்பைன்ஸ். இதனால் 2013 இல் சீனாவின் அத்துமீறல்களை எதிர்த்து நடுவர் நீதிமன்றத்தில் பிலிப்பைன்ஸ் முறையிட்டது.


கடந்த வாரம் தீர்ப்பு வழங்கிய நடுவர் நீதிமன்றம் சீனா இந்த விஷயத்தில் அத்துமீறுவதாகவும், அத்தீவுகள் வரை தனது எல்லையை நீட்டியுள்ளதால் தெற்கு சீனக் கடலின் பெரும்பகுதியையும் சீனா சொந்தம் கொண்டாடுவதாகும் என்று கூறி, அப்பகுதிகள் சீனாவுக்குட்பட்டதல்ல என்றும் தீர்ப்பு அளித்தது.




இந்நிலையில், உலக நாடுகளுக்கெல்லாம் 'அப்பாட்டக்கரான' அமெரிக்கா, அக்கடல் பகுதியில் போர் விமானத்தைத் தாங்கி நிற்கும் போர்க் கப்பல்களை நிலை நிறுத்தியுள்ளது. இந்தப் பிரச்சினையில் தான் தலையிட விரும்பவில்லை என்று கூறும் அமெரிக்கா, இப்பகுதியில் 'சுதந்திர போக்குவரத்து' முக்கியம் எனவும், இப்பிரச்சினை விரைவில் முடிய வேண்டும் என்றும் கூறுகிறது.

இந்தியா வழக்கம்போல் 'சைலன்ட்டாக' இருந்தாலும், இந்தியா எங்கள் பக்கம் என்கிறது சீனா. நீதிமன்றத்தின் தீர்ப்பை சீனா மதிக்க வேண்டும் என்று ஜப்பான் அறிவிக்க, "இந்த விஷயத்தில் ஜப்பான் மூக்கை நுழைக்க வேண்டாம் என்று கூறியுள்ளது சீனா. மேலும் நீதிமன்றத்தின் தீர்ப்பை தாங்கள் கண்டுகொள்ள போவதுமில்லை என்றும் கூறியுள்ளது. அதுமட்டுமின்றி கடல் பகுதியில் போர்க்கப்பல்களை நிறுத்தி கடற்படை பயிற்சிகளும் மேற்கொண்டு வருகிறது. இதனால் எந்த நேரத்திலும் அந்நாடுகளுக்கு இடையே போர் மூளும் என்ற அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

சமாதான முடிவுக்கு வரலாம் என்றால், சீனா பிற ஆசிய நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய நிலையில் இருக்கிறது. ஆனால்




இப்பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக ஆசிய நாடுகளுக்கே கருத்து வேறுபாடு இருப்பதால் இப்போதைக்கு இப்பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு ஏற்படாது, என்றே தெரிகிறது. வணிக ரீதியாக ஏகப்பட்ட ஆதாயங்கள் இருப்பதால் எந்த நாடும் இத்தீவுகளை விட்டுக் கொடுக்க மறுக்கின்றன. சீனாவோ, இவ்விஷயத்தில் பின்வாங்கினால் இமேஜ் பாதிக்கும், என்பதால் விடாப்பிடியாக இருக்கிறது. பிலிப்பைன்சும் இந்த விஷயத்தில் விட்டுக் கொடுக்காமல் தன் பங்கிற்கு போர்க்கப்பலை ஸ்பொட்டுக்கு அனுப்பியுள்ளது.

தண்ணீருக்காக ஒரு உலகப்போர் வரும் என்று பலரும் சொல்லிக் கொண்டிருக்க, தீவுகளுக்காக தென் சீனக் கடல் பகுதியில் போர் ஒன்று 'சைலன்ட்டாக' தொடங்கியுள்ளது. தங்களின் சூப்பர் பவரை நிரூபிக்க இந்நாடுகள் போர்க்கப்பல்களை வரிசையாய் நிறுத்த உலக அரசியலில், எந்நேரமும் எந்தப் பூகம்பமும் வெடிக்கலாம். பொண்ணுக்கும் மண்ணுக்குமான போர் மன்னர் காலத்தில் மட்டுமல்ல, மடிக் கணினி காலத்திலும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது.

## சாலையே இல்லாத கிராமம்

'நெதர்லாந்தின் வெனிஸ்' என்றழைக்கப்படுகிறது ஜிதூர்ன் (Giethoorn) கிராமம். இந்தக் கிராமத்தில் சாலைகளே கிடையாது. கார்கள் அனைத்தும் கிராமத்திற்கு வெளி யில்தான் நிற்க வேண்டும். கிராமம் முழுக்க நான்கு கிலோமீட்டர் தூரமுள்ள கால்வாய் ஓடுகிறது. குட்டி குட்டித் தீவுகள் அடங்கிய இந்தக் கிராமத்தில் 180க்கும் மேற்பட்ட அழகான பாலங்கள் உள்ளன. இவற்றின் வழியாகவும், சிறிய படகுகள் வழியாகவும் மட்டுமே இந்தக் கிராமத்தில் பயணிக்க முடியும். வெனிஸ் நகருக்கு நிகரான அழகுடன் காணப்படுவதால், சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கமாக இது கருதப்படுகிறது. குறிப்பாக சீனாவிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஒரு லட்சத்திலிருந்து இரண்டு லட்சம் வரையிலான சுற்றுலாப் பயணிகள் இந்தக் கிராமத்திற்கு விசிட் அடிக்கின்றனர்.











## வாரமொரு குறள்

*குறள் 39*

*அறத்தான் வருவதே இன்பம் மற்றெல்லாம்*
*புறத்த புகழும் இல.*

**பொருள்**

தூய்மையான நெஞ்சுடன் நடத்தும் அறவழி வாழ்க்கையில் வருகின்ற புகழால் ஏற்படுவதே இன்ப மா கும். அதற்கு மாறான வழியில் வருவது புகழும் ஆகாது இன்பமும் ஆகாது.

## மயிலே! குயிலே!




மயிலே, மயிலே ஆடிவா
மக்காச் சோளம் தருகிறேன்!
குயிலே, குயிலே பாடிவா
கோவைப் பழங்கள் தருகிறேன்!

பச்சைக் கிளியே பறந்துவா
பழுத்த கொய்யா தருகிறேன்!
சிட்டுக் குருவி நடந்துவா
சட்டை போட்டு விடுகிறேன்!

ஓடைக் கொக்கு இங்கே வா
ஓடிப் பிடித்து ஆடலாம்!
மாடப் புறாவே இறங்கிவா
மடியில் குந்திப் பேசலாம்!

## கொத்துக்கனி



மேல் பகுதியில் பசுமையான தடித்த இலைக் கொத்து. சொரசொரப்பான மேற்பகுதி. உள்ளே மஞ்சள் நிற சதைப்பகுதி. இனிப்பும், புளிப்புமாக சுவை கொடுக்கும் அன்னாசிப் பழத்தை (Pine Apple) எல்லோருக்கும் பிடிக்கும்தானே!

'அன்னாசி' என்பது போர்த்துக்கேய மொழிச் சொல். பிரேசில் நாட்டைத் தாயகமாகக் கொண்ட அன்னாசிப் பழத்தைத் தமிழில் 'செந்தாழை' பழம் என்கிறோம். வெப்ப மண்டலப் பழமான அன்னாசி நார்ச்சத்து மிக்கது. அன்னாசி ஒரு கூட்டுக் கனி. இது கொத்து மலர் களை (Inflorescence) உடையது. அன்னாசியின் ஒவ்வொரு மலரும் சூல் பிடித்துப் பழமாக ஆகும்போது ஒரே பழமாக அடுக்கடுக்காக அமைந்து விடுகிறது.

## வானம் நீலமாகத் தெரிவது ஏன்?

வாயுமண்டலத்தில்(ATMOSPHERE) கூடுதலான சதவிகிதம் (78 % நைற்றஜென், 21 % ஒக்சிஜென்) வாயுக்களும் மிகுதி நீராவியும் மாசுத்துணிக்கைகளும் உண்டு.




அவற்றினூடே ஒளி பூமியை வந்தடைகிறது. ஒளி அலைகள் வேறுபட்ட அலை நீளத்தை உடையவை. சிவப்பு நிறம் கூடிய அலை நீளம் கொண்டது. நீல நிறம் குறைந்த அலைநீளம் உடையது.

கூடிய அலைநீளமுடைய ஒளி அலைகள் பூமியை வந்தடைகின்றன. குறுகிய அலை நீளம் உடைய துணிக்கைகள் நிறத்தை உருவாக்குகின்றன. அவை தெறிப்படைந்து நீல நிறமாக வானம் தோன்று கிறது.

இவைகள் காற்றிலுள்ள ஒளியைச் சிதறடிக்கின்றன. சிதறிய ஒளி மேலும் மேலும் சிதறடிக்கப்படுகிறது. இவ்வாறு நடைபெறும் போது மிக அதிகத்துடிப்புடைய நீல நிறம் மிக அதிகமாக சிதறடிக்கப்படுகிறது.(சிவப்பு மிகக்குறைவாக சிதறுகிறது)

பௌதீக விதிப்படி ஒரு நிறத்தின் ஒளி அலைகளின் நீளம் அதிகமாக இருந்தால் அவை நம் பார்வைக்குக் கிடைக்காமலே போய்விடும். வானம் நீல நிறமாக இருப்பதால் அதை பிரதிபலிக்கும் கடலும் நீல நிறமாகவே இருக்கிறது.

## பலூன்கள் மிக உயரத்தில் வெடிப்பது ஏன்?



காற்று தன்னுடைய எடை காரணமாக எல்லாவற்றின் மீதும் அழுத்தத்தை கொடுக்கிறது. மலை உச்சியின் மீது ஏறும்போது காற் றழுத்தம் குறைவாக இருப்பதற்குக் காரணம் மேல் காற்று அடுக்கு குறைவாக இருப்பதே ஆகும். சில பலூன்கள் காற்றை விட இலேசான ஹீலியம் வாயுவால் நிரப்பப்பட்டுள்ளன. நீங்கள் ஹீலியம் நிரப்பப்பட்ட பலூன்களை பறக்கவிட்டால் அது வேகமாக மேலே செல்கிறது. உடனே அது வெடிக்கிறது.

பலூன் உயரே செல்லச் செல்ல காற்றமுத்தம் குறைவாக உள்ள இடத்தை நோக்கிச் செல்கிறது. பலூனுக்கு வெளியே காற்றின் அழுத்தத்தை விட உள்ளே உள்ள காற்றின் அழுத்தம் அதிகமாக இருப்பதனால் அது பலூனை வெளிப்பக்கமாக தள்ளுகிறது. அதனால் பலூன் உப்பி முடிவில் வெடிக்கிறது.



# குறுக்கெழுத்துப் போட்டி - 12

### குறுக்கெழுத்துப் போட்டி இல. 12

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | ■ | 3 | |
| | ■ | 4 | 5 | | ■ |
| 6 | | | | ■ | 7 |
| ■ | ■ | | ■ | 8 | ■ |
| 9 | 10 | ■ | 11 | | |
| ■ | 12 | | ■ | | ■ |

**இடமிருந்து வலம்**

1. இராமருக்கு இதுவும் உதவியதாம்.
3. இந்த வாயை மூடினாலும் ஊர் வாயை மூட முடியாது என்பார்கள்.
4. சேற்றிலே கிடப்பது. (குழம்பியுள்ளது)
6. சிரிப்பு.
9. அரசைக் கவிழ்க்க இது செய்வார்கள்.
11. பெண்.
12. கேள்விக்கு எழுதுவது.

**மேலிருந்து கீழ்**

1. வில்லுடன் இருப்பது.
2. வீட்டு அறையில் இருப்பது (குழம்பியுள்ளது)
3. தயிர் போன்ற பொருட்களை பாதுகாப்பதாக வைக்க உதவுவது.
5. யுத்தத்திற்கு இதுவும் ஒரு காரணம்.
7. பெரியது.
8. ஆலயங்களில் ஊதுவது.
10. இதனை மதியால் வெல்லலாம். (தலைகீழ்)

குறுக்கெழுத்துப் போட்டியின் சரியான விடைகளை எழுதி தபால் அட்டையில் ஒட்டி உங்கள் பெயர். முகவரியுடன் ஓகஸ்ட் 04 ஆம் திகதிக்கு முன்னர் எமது முகவரிக்கு அனுப்பி வைக்கவும். சரியான விடை எழுதிய ஐந்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் 06.08.2016 ஆம் திகதி வாரமலரில் பிரசுரமாகும்.

### குறுக்கெழுத்துப்போட்டி - 10 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

1. ஆத்திசூடி
4. கடை
6. ஏர்
8. காணி
9. அத்தை
10. பரிசு
11. தரிசு
12. தடை

**மேலிருந்து கீழ்**

1. காலை
2. கதிர்
3. சூடை
5. நா
6. ஏணி
7. சுத்தம்
8. காதலி
9. சிங்கம்
10. பசு

### சரியான விடையை எழுதியவர்கள்

1. செ. ஜெயமதி, கொட்டாஞ்சேனை, கொழும்பு -13.
2. மு. சாவித்திரி, வந்தாறுமூலை, மட்டக்களப்பு.
3. பா. சரவணன், கே.கே.எஸ் வீதி, மல்லாகம்.
4. என். சசிகலா, ஏ 9 வீதி, கிளிநொச்சி.
5. மா. பிரபா, வேலணை 2ஆம் வட்டாரம், வேலணை.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

பெயர் : ..........................................

முகவரி : ..........................................

..........................................

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 12**
**தினச்செய்தி வாரமலர்,**
**தில்லைக்கட்டி வீதி,**
**சுன்னாகம்.**

# இது தான்டா நட்பு!



சிவகார்த்திகேயனுக்கு ஸ்ரீதிவ்யாவுடன் நன்றாகவே வேர்க் அவுட் ஆகியது கெமிஸ்ட்ரி. இதனாலேயே தான் நடித்துள்ள பிரமாண்டமான ‘ரெமோ’ படத்தில் ஸ்ரீதிவ்யாவை கெஸ்ட் ரோலில் நடிக்கச் சொல்லிக் கேட்டிருக்கிறார். ஸ்ரீதிவ்யாவும் மறுப்பேதும் சொல்லாமல் நடித்துக் கொடுத்ததோடு சம்பளமும் வாங்கிக் கொள்ளவில்லையாம். படத்தில் சினிமா ஹீரோயினாகவே வருகிறாராம் ஸ்ரீதிவ்யா.

# தமிழுக்கு வரும் மிஸ் இந்தியா



2014 ஆம் ஆண்டு நடந்த மிஸ் இந்தியா போட்டியில் வென்றவர் ருஹி சிங். இந்தியில் ‘காலண்டர் கேர்ள்ஸ்’ படத்தில் நடித்திருக்கிறார். ‘போங்கு’ படம் மூலம் தமிழில் ஹீரோயினாக அறிமுகமாகிறார். அகமதாபாத், சென்னை, ம... ரையில் படப்பிடிப்பு நடந்தது. அதுல் குல்கர்னி, ராம்தாஸ், அர்ஜுன், ஷரத் லோகித்தஷ்வா, மயில்சாமி, சாம்ஸ் நடிக்கின்றனர். முகேஷ் முத்துசாமி ஒளிப்பதிவு. ஸ்ரீகாந்த் தேவா இசை. ரகுகுமார் என்கிற திரு. ராஜரத்தினம், ஸ்ரீதரன் தயாரிக்கின்றனர்.

# நயனின் விருப்பம்



முப்பது வயதைக் கடந்தாலும் சூப்பர் ஸ்டாரினி இமேஜை அப்படியே தக்கவைத்து வருபவர் நயன்தாரா. அதற்கு முக்கிய காரணம், மூத்த ஹீரோக்களோடு ஜோடி போடுவதைத் தவிர்த்துவிட்டு, தன்னை முன்னிலைப்படுத்தும் படங்களை மட்டும் தேர்வுசெய்து நடிப்பதுதானாம். இளம் கதாநாயகர்கள் என்றால் உடனே ஓகே சொல்லும் நயன், அதில் நாயகனைக் காட்டிலும் தன் கதாபாத்திரமே முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்று இயக்குநரிடம் கறாராகச் சொல்லி விடுகிறாராம். இந்த கண்டிஷனுக்கு ஓகே என்றால்தான் கால்ஷீட்டே கொடுப்பாராம்.

# அனுவைக்கு த... அனு...




‘குற்றம் கடிதல்’ படத்தை இ...
முக்கியத்துவமுள்ள த்ரில்...
சமீபத்தில் ஜோதிகாவிடம் ...
சம்மதித்தார். சினிமாவிலி...
பானுப்ரியாவும் இப்படத்தி...
சரண்யா முக்கிய வேடங்க...

...' படத்தை இயக்கிய பிரம்மா, ஹீரோயினுக்கு ...ுள்ள த்ரில்லர் அம்சத்துடன் ஒரு கதையை ...திகாவிடம் கூறினார். அது பிடிக்கவே நடிக்கச் ...சினிமாவிலிருந்து ஒதுங்கி இருக்கும் ...் இப்படத்தின் மூலம் ரீஎன்ட்ரி ஆகிறார். ஊர்வசி, ...ிய வேடங்களில் நடிக்கின்றனர்.



## ஜோவுடன் பானுப்ரியா



## மாமாவுக்கு மரியாதை

தனது பிறந்தநாள் விருந்தாக ரசிகர்களுக்கு 'தொடரி'யைக் கொடுக்கலாம் என நினைத்திருந்தார் தனுஷ். ஆனால், 'கபாலி' அந்த நேரத்தில் வெளியாக இருப்பதால் 'தொடரி' யைத் தள்ளி வைத்துவிட்டார்களாம். இதனால் தனுஷ், தனது 'கொடி' படத்தின் ஃபர்ஸ்ட் லுக் டீசர் மற்றும் போஸ்டரை தனது பிறந்தநாளன்று வெளியிட முடிவெடுத்துள்ளாராம



## ...த தயாராகும் ...னுஷ்கா

"பாகுபலி" படத்தைத் தொடர்ந்து "பாகுபலி 2" வை ராஜமௌலி தற்போது இயக்கி வருகிறார். இப்படத்தின் படப் பிடிப்பு தற்போது விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. முதல் பாகத்தில் வயதான தோற்றத்தில் நடித்த அனுஷ்காவிற்கு இதில் பிரபாஸுடனான காதல் காட்சி கள் அதிகம் இருக்கிறதாம். இதற்காக அனுஷ்கா தனது உடல் எடையைக் குறைத்து வருகிறார். ஆனால் "இஞ்சி இடுப்பழகி" படத்திற்காக மொத்த மாக ஏற்றிய உடல் எடையை உடனடியாகக் குறைக்க அனுஷ்காவால் முடிய வில்லை. இதனால் கோபமடைந்த ராஜ மௌலி உடல் எடையை விரை வாகக் குறைக்குமாறு அனுஷ்கா வைக் கடிந்து கொண் டாராம். இதனால் அறுவைச் சிகிச்சை செய்து எடையைக் குறைக்க லாமா? என அனுஷ்கா தற்போது தீவிரமாக சிந்தித்து வருகிறாராம்.


## அம்மா கேரக்டருக்காக எடை கூடினேன்!



சன் டி.வி 'பிரியமானவள்' சீரியலில் 'உமா'வாகவே மாறிப்போயிருக்கிறார் பிரவீணா! "பத்தாவது படிச்சப்போ நடிக்க ஆரம்பிச்சு, கடந்த 20 வருஷங்களா நடிச்சுட்டு இருக்கேன். மலை யாளத்துல 70 படங்கள், 10 சீரியல்களில் ஹீரோயினா நடிச்சிருக்கேன். பல படங்களில் டப்பிங் ஆர்ட்டிஸ்ட்டாவும் வேலை பார்த்திருக்கேன். குடும்பத்தைக் கவனிப்பதற்காக... 10 படங்கள், நான்கு சீரியல்கள்னு வந்த வாய்ப்புகளை எல்லாம் தவிர்த்துட்டு, கொஞ்சம் கொஞ்சமா நடிக்கறதை குறைச்சுகிட்டு இருந்தப்போதான், சன் டி.வி 'பிரியமானவள்' சீரியல் வாய்ப்பு வந்துச்சு. 'உமா' கேரக்டர் பிடிச்சிருந்ததால நடிக்க ஒப்புக்கிட்டேன். சீரியலில், என் சகோ தரர்கள் வயசில் உள்ள நான்கு ஆண்க ளுக்கு அம்மாவான 'உமா'வா நடிக்கிற துக்காக, நிறைய சாப்பிட்டு எடை கூடினேன். எப்பவும் குர்த்தி, ஜீன்ஸ்னே இருக்கிற நான் அந்த கேரக்டருக்காக பட்டுப்புடவை, நகை, கொண்டை, மல்லிகைப்பூ, பெரிய பொட்டுனு மேக் அப் போட்டு மாறினப்போ, ரொம்ப வித்தியாசமா இருந்தது. ஆனாலும், பிடிச்சிருந்தது. இப்போ என்னோட நிஜப்பெயரே தெரியாத அளவுக்கு தமிழ்நாட்டில் எல்லோருக்கும் நான் 'உமா'வாகிப் போயிட்டேன். 'வெற்றிவேல்' படத்துல நடிகர் சசிகுமார் சாரோட அம்மாவா நடிச்சேன். வாழ்க்கை சந்தோஷமா போயிட்டு இருக்கு!"

## கபாலிடா!


தமிழ், இந்தி சினிமாக்களில் அவ்வப்போது ஹீரோயினாகத் தலையைக் காட்டிவந்த ராதிகா ஆப்தே ரஜினிக்கு ஜோடியாக 'கபாலி'யில் நடிக்க ஆரம்பித்ததில் இருந்தே அவருக்குப் பட வாய்ப்புகள் குவிந்தன. ஆனாலும் எந்தக் கதையையும் ஒப்புக்கொள்ளாதவர் தற்போது ஒரே ஒரு படத்தை மட்டும் ஓகே செய்தி ருக்கிறார். அனில் கபூரின் மகன் ஹர்ஷவர்தன் கபூர் நடிக்கும் 'பவேஷ் ஜோஷி' என்ற படத்தை மட்டும் ஒப்புக்கொண்டிருக்கிறார். 'கபாலி' ரிலீஸுக்குப் பிறகே தமிழ்ப் படங்களில் நடிக்க ஓகே சொல்வேன் என்கிறாராம்.








# கூந்தல் அழகியாக திகழ...



ஆறடிக் கூந்தலும், 60ஐ கடந்த பிறகும் நரைக்காத தலையும் அந்தக் காலத்து மனிதர்களுக்கு சர்வ சாதாரணமாக சாத்திய மானது. ஆனால், இன்றோ 15ஐ கடக்கும் முன்பே நரை... 20 பிளஸ்சில் வழுக்கை... 30 பிளஸ்சில் மொத்தமும் சொட்டை என கூந்தல் பிரச்சினைகள் ஒருவரையும் விட்டு வைப்பதில்லை.

அவர்களுக்கு சாத்தியமானது நமக்கு மட்டும் ஏன் முடிவ தில்லை என எப்போதாவது யோசித் திருப்பீர்களா? அவர்களுக்கு கூந்தல் என்பது அவர்களின் ஆளு மையின் அடையாளமாக இருந்தது. அவர்கள் இயற் கையை மதித்தார்கள்... நேசித்தார்கள்... இயற்கை வழி வாழ்ந்தார்கள்... இவையே காரணம். எல்லாவற்றையும்விட முக்கியமாக அவர்கள் கூந்தல் அழகுக்கு எந்த செயற்கையான வழி களையும் சிகிச்சைகளையும் நாடவில்லை.

அழகான, அடர்த்தியான, நீளமான கூந்தல் என்பதைப் பெருமைக்குரிய விஷ யமாகக்கருதினார்கள். செடிகள், மூலிகைகள் போன்றவற்றைக் கொண்டு அவர்களே கூந்தல் அழகு மற்றும் ஆரோக்கியத்துக்கான அனைத்துப் பொருட்களையும் தயாரித்துக் கொண்டார்கள். அப்படி அவர்கள் கூந்தல் பராமரிப்புக்குப் பின்பற்றிய சில விஷயங் களைத் தெரிந்து கொள்வோமா?

நெல்லிக்காய்க்கு இளமையைத் தக்க வைக்கிற குணம் உண்டு என்பதை அறி வோம். இந்தியாவில் வாழ்ந்த மூதாதையர் கூந்தல் அழகுக்கும் ஆரோக்கியத்துக்கும் நெல்லிக்காயில் இருந்து எடுக்கப்பட்ட எண் ணெயை உபயோகித்திருக்கிறார்கள். இரும்புச் சத்தும் ஆன்ட்டி ஒக்சிடென்ட்டும் அதிகமுள்ள அந்த எண்ணெய் அவர் கள் கூந்தலை கருகருவென்றும் அடர்த்தியாக வும் வைத்தது.

ஹென்னா என்பதை கூந்தலுக்கு சாயம் ஏற்றுகிற பொருளாகத்தான் நாம் அறிவோம். அந்தக் காலத்தில் அதை பொலிவிழந்த, மெலிந்த கூந்தலுக்கு ஊட்டம் ஏற்றும் பொருளாகப் பயன் படுத்தியிருக்கிறார்கள்.

வீட்டுக்கு வீடு கற்றாழை வளர்த்து அதன் ஜெல் போன்ற பகுதியை கூந்தலுக்குப் பயன்படுத்தினார்கள். கற்றாழை உடலுக்கும் கூந்த லுக்கும் குளிர்ச்சியைக் கொடுக்கக் கூடியது. வெயிலில் அலைவதால் கூந்தல் பாதிக்கப்படுவதைத் தவிர்த்து பட்டுப் போல மென்மையாக வைக்கக்கூடியது.

ரோஸ்மெரி என்பதை இன்றைய மாடர்ன் சமையலுக்கு அடிக்கடி பயன்படுத்துகிறோம். மண்டைப் பகுதியில் ரத்த ஓட்டத்தைத் தூ ண்டி, மயிர்க்கால்கள் நன்கு சுவாசிக்க வழி செய்து, அதன் மூலம் கூந்தல் வளர்ச்சிக்கும் உதவும் தன்மை அதற்கு உண்டு என்பதை அந்தக்காலத்து மனிதர்கள் அறிந்திருந்தனர். ரோஸ்மெரிக்கு இளநரையை விரட்டும் ஆற்றலும் உண்டாம்.

மேற்கு ஆப்பிரிக்காவில் கருப்பு சோப்பு என்பதை கூந்தலுக்குப் பயன்படுத்தியிருக் கிறார்கள். தேங்காய் எண்ணெய், பனை எண்ணெய், கோகோ, வாழைக்காய் தோல் ஆகியவற்றைக் கொண்டு தயாரித்த அந்த பிளாக் சோப்பு, சரும அழகு, கூந்தல் அழகு என இரண்டையும் காக்கும் டூ இன் வன்னாக இருந்ததாம்.

சீனாவில் டீ சீட் ஆயில் (Tea seed oil) என்கிற எண்ணெயைப் பயன்படுத்தினார் களாம். அது ஒலிவ் எண்ணெய்க்கு இணை யான அத்தியாவசிய கொழுப்பு அமிலங் களைக் கொண்டதாம். இந்த எண்ணெய் கூந்தல் வளர்ச்சியை அதிகரித்ததாகவும், கூந்தலுக்கு கருமை நிறத்தைக கொடுத்த தாகவும் அவர்கள் நம்பினார்கள். இமை களுக்கு உபயோகிக்கிற மஸ்காராவில் கூட இந்த எண்ணெயை ரகசிய இடுபொருளாக அவர்கள் இப்போதும் பயன்படுத்துவதாகத் தகவல்.

பிரெட் பக்கோடா செய்வதற்கு முன் வெட்டி வைத்திருக்கும் பிரெட் ஸ்லைஸ்களை பாலில் முக்கி எடுத்த பிறகு பக்கோடா மாவில் போடுங்கள். அட்டகாசமான சுவை கிடைக்கும்.

ஒரேஞ்சு பழத் தோல்களை எறிந்து விடாமல் பத்திரப்படுத்தி வையுங்கள். தே நீர் தயாரிக்கும் போது அந்தத் தோலை துளியூண்டு கிள்ளி, தேயிலையுடன் சேர்த்து டிகாஷன் தயாரித்தால் மணம் தூ க்கலாக இருக்கும்.

கேஸ் ஸ்டவ்வை சமையல் முடித்து, ஆறியபின், சுத்தமாகத் துடைத்து, நியூஸ் பேப்பரால் துடைக்க "பளிச் பளிச்"தான்!

வாழைப் பழங்கள் வெளிப்படுத்தும் வாயுக்கள் பிற பழங்களை விரைவாக பழுக்க வைத்துவிடும். ஆதலால் வாழைப் பழங்களை தனியே வைப்பது உகந்தது.

பூரி மாவுக்கு நெய் சேர்த்துப் பிசையக் கூடாது. அப்படிச் செய்தால் பூரி தூள் துளாக ஆகி விடும்.

வெண்டைக்காய் வதக்கல் கறி செய்யும் போது சிறிது ஆம்சூர் (மாங்காய்ப்பொடி) பொடியையும் சேர்த்துக் கொள்ளலாம். சுவை சூப்பர்.

# திடீர் தலைவலிக்கு தீர்வு



தலைவலியும், வயிற்று வலியும் தன க்கு வந்தால் தானே தெரியும் என்ற வார்த் தைகளில் எவ்வளவு உண்மையுள்ளது.

தலைவலி வருபவர்களின் வேதனை சொல்லி மாளாது. இதற்கு முக்கிய காரணம் மன மற்றும் வேலை அழுத்தம், மசாலா கலந்த உணவுகள்.

இதனை அப்போதைக்கு தீர்வு காண, மாத்திரைகள் சாப்பிடுவார்கள். ஆனால் அவை சிறுநீரகத்தை பாதிக்கும்.

அதற்கு பதில் வீட்டில் உள்ள சில பொருட்களின் மூலம் தலைவலிக்கு தீர்வு காணலாம்.

**லாவெண்டர் எண்ணெய் (Lavender Oil)**

வாசனையில் சிறந்த லாவெண்டர் ஒயில் தலைவலியை போக்குவதிலும் முக் கிய பங்கு வகிக்கிறது. உடம்புக்கு குளிக் கும் போது வெந்நீரில் 2 அல்லது 3 துளிகள் லாவெண்டர் ஒயிலை கலந்து குளிப்ப தால் தலைவலி குறையும் (காரணம் நாம் அந்த ஒயிலை நுகர்வதால்). இல்லையேல் தலைவலிக்கும் போது தடவி கொள்ளலாம்.

**மிளகுக்கீரை எண்ணெய் (Peppermint Oil)**

டென்ஷனால் வரும் தலைவலிக்கு இந்த எண்ணெய் சிறந்தது. இதில் உள்ள வாஸ்கொ - டியலிட்டிங் மற்றும் பண்புகள் வாஸ்கொ - கான்ஸ்டரிட்டிங் (Vaso-Cons tricting and Vaso-Dilating) பண்புகள் ரத்த ஓட்டத்தை சீராக்கும். பெரும்பாலும் ஒற்றை தலைவலி குறைவான ரத்த ஓட்டத் தால் ஏற்படும். இந்த எண்ணெய் ரத்த நாளங்களை சீராக திறக்கவும், மூடவும் உதவுகிறது.

**பசலைக்கீரை எண்ணெய் (Basil Oil)**


பீட்சா போன்றவற்றில் பயன்படும் பசலை கீரையின் எண்ணெய், டென்ஷன் மற்றும் தசை சுருக்கத்தால் ஏற்படும் தலைவலியை போக்க உதவுகிறது. தலைவலியின் போது இதனை நுகர்வதால் மனதை ரிலாக்ஸ் ஆக வைக்க உதவுகிறது.

**ஆளி விதைகள் (Flaxseed)**

ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் உள்ள உணவினை உட்கொள்வதன் மூலமும் தலைவலி குறையும். ஆளி விதையில் ஒமேகா 3 கொழுப்பு அமிலங்கள் உள்ளதால் இதனை உட்கொள்வதன் மூலம் தலைவலி குறைகிறது.

இது தவிர உணவுகளில் கட்டுப்பாடுகள் மற்றும் தலைவலிக்கும் இடத்தில் மென்மை யாக மசாஜ் செய்வதன் மூலமும் நிவாரணம் பெறலாம்.

# சரியான நேரத்தில் தண்ணீரைக் குடிப்பதால் ஏற்படும் நன்மைகள்



விழித்ததும் அருந்தும் 2 கிளாஸ் நீரால் உள்ளுறுப்புக்கள் சுறுசுறுப் படையும்.

உணவுக்கு 30 நிமிடங்களுக்கு முன் அருந்தும் 1 கிளாஸ் நீரால் ஜீரண சக்தி அதிகரிக்கும்.


குளிப்பதற்கு முன் அருந்தும் 1 கிளாஸ் நீரால் தாழ்வு இரத்த அழுத்தத்துக்கு உதவும்.

துாங்கு முன் குடிக்கும் 1 கிளாஸ் நீரால் மாரடைப்பிலிருந்து தப்பிக் கொள்ள முடியும்.

## போட்டிச் சிறுகதை 11



பெயர் : லோ. தனுசியா
முகவரி : சிங்கை நகர் புலோலி.
சிறுகதை : கோபுரங்கள் சரிகின்றன



# கோபுரங்கள் சரிகின்றன

'எத்தினை நாள் சொல்லுறது குடிக்க வேண்டாம் குடிக்க வேண்டாமெண்டு இப்ப குடிச்சுபோட்டு வந்து மனிசரை நிம்மதியா இருக்க விடுறதில்லை." பாக்கியத்தின் குரல் கோபமும் ஆத்திரமும் பொங்கிக் கொண்டு வந்தது. ஆம் இது பாக்கியத்தின் வீட்டில் வழமையாக நடக்கிற பூசை தான். சுந்தரம் தினமும் குடித்து விட்டு வந்து வீட்டில் ஒரே தொல்லை. இவர்களின் வாழ்க்கை மிகவும் வறிய சூழ்நிலைக்குட்பட்டது.

"அம்மா நாளைக்கு பள்ளிக்கூடத்திலே பரீட்சைக்காசு கட்டவேணுமம்மா இல்லாட்டால் பரீட்சை எழுத விடமாட்டினம்" என்று கூறிக்கொண்டு அறையில் இருந்து வெளிப் பட்டு வந்தாள் அவர்களின் மகள் அனித்தா.

'சமையலுக்கு சாமான் வாங்க கொடுத்த காசை குடிச்சுப்போட்டு இந்த மனிசன் கிடக்குது. இப்ப என்னட்ட ஒரு காசும் இல்லையம்மா. நீ இனி பள்ளிக்கூடம் போக வேண்டாம்" என மனவருத்தத்துடன் கூறினாள் தாய் பாக்கியம். அப்போது வேலையால் வந்து விட்ட குமாருக்கும் தாய் கூறியது கேட்டுவிட்டது. குமார் தான் இவ்வீட்டிற்கு மூத்த மகன். தகப்பனின் குடி காரணமாக பாதி வயதில் பள்ளியை இழந்தான். உள்ளே வந்த குமார், 'என்னது தங்கச்சியை பள்ளிக்கூடத்தால நிறுத்தப் போறியளோ? வேண்டாம் அவள் படிக்கட்டும். எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. நான் பாப்பன் என்ர தங்கச்சியை" என்று அன்பும் பாசமுமாக கூறினான்.

அனித்தாவிற்கு இப்பொழுது 16 வயது ஆகின்றது. க.பொ.த. சாதாரணதரப்பரீட்சை கிட்டிவிட்டது. விடிந்தால் பரீட்சை. அவள் படித்துக்கொண்டிருக்கும் போது சுந்தரம் குடித்து விட்டு வந்து வீட்டில் ஆகாத வார்த் தைகளால் பேசிக்கொண்டிருந்தான். அனித் தாவுக்கு கோபம் கோபமாக வந்தது.

'அப்பா சத்தம் போடாதையுங்கோ. நான் படிக்கிறன் எல்லோ" என்று உரக்கக் கூறினாள்.

'யேய் என்னடி. பெரிய படிப்பு படிச்சு என்ன கிளிக்கப் போறாய்" என்று புலம்பினான் சுந்தரம்.

'அப்பா கொஞ்சம் சத்தம் போடா தையுங்கோ. தங்கச்சியல்லோ படிக்கிறாள்" என்று அதட்டினான் குமார். அதற்குப்பிறகு அவன் சத்தம் அங்கியது. தங்கச்சியிலிருந்த பாசமிகுதியால் 'நீ வடிவா படியம்மா" என்று கூறி தங்கையை படிக்க வைத்தான் குமார்.

கிழக்கு மேட்டிலே சூரியன் தக தக என பொன்னாடை போர்த்தியதைப் போல மெல்ல மெல்ல எட்டிப்பார்க்கிறான். மறு புறம் பறவைகளின் சத்தம் மனதிற்கு இதமாக இருந்தது. காலையை வரவேற்பது போல தாமரை மொட்டுக்கள் அவிழ்ந்து சிரித்துக் கொண்டு இருக்கின்றன. அனித்தா பரீட்சைக்கு செல் வதற்காக ஆயத்தமாகினாள். தாய் காலை உணவு தயாரித்து அனித்தாவிடம் கொடுக்க அதை சாப்பிட்டு விட்டு,

'அண்ணா போவலாமா........." என்று குமாரைப் பார்த்துக் கேட்க அவனும் 'வா அனித்தா" என்று கூறி அவளை ஏற்றிச் செல்கிறான். வழமையாக தங்கையை பாடசாலைக்கு கொண்டு சென்று விட்டு விட்டே வேலைக்கு செல்வான். அனித்தாவை பாடசாலையில் இறக்கிவிட்டு வேலைக்கு விரைந்து கொண்டிருக்கின்றான் குமார். அவன் சென்று கொண்டிருக்கும் போது திடீரென எதிரில் வந்த லொறி அவனை முட்டியது. 'அம்மா" என்ற இறுதி மூச்சோடு அந்த இடத்திலேயே மண்ணை முத்தமிட்டான். அங்குள்ளவர்களால் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படுகிறான்.

"என்ன இண்டைக்கு எடுத்ததுக்கெல்லாம் பல்லி சொல்லுது. நேற்று கந்தையாவின்ர நாய் ஊளையிட்டது. என்ன அபசகுனமோ" என்று மனதிற்குள் எண்ணிக்கொண்டு தண்ணீர் குடத்தை எடுத்து தண்ணீர் அள்ள முற்பட்ட பாக்கியத்தின் காதில் யாரோ கூப்பிடும் சத்தம் "ஆர் கூப்பிடுகிறது" என்று மனதிற்குள் எண்ணிக்கொண்டு வெளியே வர இரு இளைஞர்கள் உங்கட மகனுக்கு ஆக்சிடண்ட் ஆஸ்பத்திரியில கொண்டு போயாச்சு" என்று பதறியபடி வார்த்தைகளை விழுங்கினர். "என்ன ஆக்சிடண்டோ" "என்ர பிள்ளைக்கோ" என்று பதறிய படி கத்தினாள் பாக்கியம்.

"டொக்ரர் என்ர பையனுக்கு சுகமோ டொக்ரர்" என்று வெளியே வந்து வைத்தியரை பார்த்து பாக்கியம் கேட்க வைத்தியர் பேசாமல் மௌனமாய் நின்றார்.

"டொக்ரர் ஏன் பேசாமல் நிக்கிறியள் அண்ணாவுக்கென்ன? என்ன ஆச்சு" என்று ஏக்கத்துடன் அனித்தா கேட்க "சொறி உங்கட அண்ணா" என்று சொல்லி முடிக்க முன் "அண்ணாக்கு என்ன" என்று அனித்தா கேட்க "உங்க அண்ணாவை காப்பாத்த ஏலாம போச்சு" என்று டொக்ரர் கூற அந்த வைத்தியசாலையே ஒரு கணம் அதிர்ந்தது. "அண்ணா எப்படி யெல்லாம் ஆளாக்குவன் எண்டிருந்தாய்" என்று கூறி அழுதாள் அனித்தா.

குமாரின் உழைப்பில் வாழ்ந்த குடும்பம் கஸ்டத்தில் வீழ்ந்தது. நாட்கள் வாரங்களாகி வாரங்கள் மாதங்களாகி மாதங்கள் வருடங்களாகி பத்து ஆண்டுகள் ஓடி விட்டன. அனித் தாவிற்கு இருபத்தாறு வயது ஆகிவிட்டது. பாக்கியம் மகளின் திருமணத்திற்காக சேர்த்த பணம் இப்பொழுது ஒரு லட்சம் ரூபாவாக மாறியிருந்தது. அதை கொண்டு அனித்தாவிற்கு வரன் தேட ஆரம்பித்தாள்.

புறோக்கர் ஒரு மாப்பிள்ளையை காட்டி அவரை திருமணம் செய்ய நிச்சயித்தார். "மாப்பிள்ளை பெரிய இடம் நல்ல குணம் உங்களுக்கு பிடிச்சுதண்டா சரி. மிச்சத்த நான் பாா்ப்பன்" என்று தன் பொக்கைவாயால் புறோக்கர் கிழவன் கூறினார். "எங்களுக்கு பூரண சம்மதம்" என்று பாக்கியம் கூறினாள். திரு மணத்திற்கு நாள் குறிக்கப்பட்டும் விட்டது.

திருமண நாளும் வந்தது. அனித்தா அலங்கரிக்கப்பட்டுக் கொண்டிருந்தாள். அனித்தாவின் சந்தோசத்திற்கோ ஓர் அளவில்லை. சிட்டுக்குருவி போல அவள் மனம் வானத்தில் சிறகடிப்பது போன்று இருந்தது. மாப்பிள்ளையும் அனித்தாவின் அழகிற்கேற்ப துடிப்பானவனாக காணப் பட்டான். திருமண வீட்டில் ஓமம் வளர்த்து ஐயர் ஏதோ மந்திரங்கள் சொல்லிக் கொண்டு இருந்துவிட்டு "பொம்புளையை கூப்பிடுங்கோ" என்று கூறினார். அப்பொழுது அறையில் இருந்து வெளிப்பட்டாள். கலைமகளே வியக்கக் கூடிய அழகை கொண்டவளாக காணப்பட்டாள் அனித்தா. அவள் அழகை பார்ப்பதற்கோ என்னவோ அந்த காலையிலும் சூரியன் எட்டி எட்டித் தாழ்கிறான். அனித்தா அழைத்து வரப்பட்டு மாப்பிள்ளை பக்கத்தில் உட்கார வைக்கப்படுகிறாள். ஐயரே "கெட்டி மேளம் கெட்டி மேளம்" என்று கூற மாப் பிள்ளை தாலியை எடுத்து அனித்தாவின் கழுத்தருகே கொண்டு செல்ல "ஐயோ ஐயோ வைத்திருந்த சீதனக் காசை காணயில்லை. என்ன செய்வன்" என்று குளறினாள் பாக் கியம். "தாலியை கீழே போடு" என்றொரு சத்தம். அது மாப்பிள்ளையின் தகப்பன் "நல்லா தான் தாயும் மகளும் நடிக்கினம்" எங்களை ஏமாத்தினம். வாடா போவம் என் றாள். "அப்பா அது வந்து" என்று மாப் பிள்ளை இழுக்க நீ வராட்டி நில் என்று விட்டு கிளம்ப மாப்பிள்ளையும் பின்னால் சென்றான்.

"ஐயா நான் எப்படியாவது உங்களுக்கு காசு தருவன். தயவு செய்து என்ர பிள்ளைய கல்யாணம் செய்யுங்கோ" என்று கூறி அவர்களின் காலை பிடிக்க இடறிவிட்டு கிளம்பினர். திருமணத்திற்கு வந்தவர்கள் "நல்லாத்தான் நடிக்கினம்" என்று முணு முணுத்துக்கொண்டு சென்றனர். "ஐயா என்ர பிள்ளையின்ர வாழ்க்கை" என்றவாறு மயங்கி விழுந்தாள் பாக்கியம். அப்போது வேலியில் ஒரு சத்தம் ஏதோ சத்தம் மலைத்துப் போய் நின்ற அனித்தா திரும்பிப் பார்த்தாள். அங்கே சுந்தரம் வெறியில் வீழ்ந்து கிடக்கிறான்.

இனி இந்த அனித்தாவின் வாழ்க்கை தான் என்ன?


இச்சிறுகதை பரிசுக்குரியதென நீங்கள் சிபார்சு செய்ய விரும்பினால், இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கூப்பனை நிரப்பி எமக்கு அனுப்பி வைக்கவும்.

## சிறுகதைப் போட்டிக்கான கூப்பன் - 11

தெரிவு செய்யப்படும் சிறுகதைத் தலைப்பு : ..........................................
..........................................
சிறுகதையின் இலக்கம் : ..........................................
எழுதியவர் பெயர் : ..........................................
சிபார்சு செய்பவர் பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................
தொலைபேசி இலக்கம் : ..............................
.......................................................... ஆகிய நான்
இச் சிறு கதையை வெற்றிக்கு சிபார்சு செய்கிறேன்.

..............................
ஒப்பம்


கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி
**தினச்செய்தி சிறுகதைப் போட்டி**
**தில்லைக்கட்டி வீதி,**
**சுன்னாகம்.**



# கொடை வள்ளல் கலைவாணர் என்.எஸ்.கே!


கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன் கதாநாயகனாகவும், காமெடி நடிகராகவும் நடித்து பேரும், புகழும் பெற்று, பொருளாதாரத்திலும் 'ஓஹோ' வென்று உயர்ந்து நின்ற திரையுலகத்தின் பொற்காலம். நிறைய திரைப்படங்களில் நடித்து கொண்டிருந்தார். வருமானமும் அதிகமாக வந்து கொண்டிருந்தது. இந்தச் சூழ்நிலையில் தன்னைத் தேடிவந்து நலிந்த நாடக கலைஞர்கள், ஏழ்மை நிலையில் உள்ள சாதாரண மக்கள் உதவி கேட்கும்போது அவர்களுக்கு இல்லை என்று சொல்வதில்லை. அவர்களை வயிறு நிறைய சாப்பிட வைத்து அதன்பிறகு கேட்டு வந்த உதவியையும் செய்து அனுப்புவார். இதனால் வருமான வரித்துறைக்கு தனது வருமானத்தைப் பற்றி கணக்குக் காட்டும்போது ஏழைக்கு உதவியது, கல்யாணத்திற்காக கொடுத்தது, படிப்புக்கு கொடுத்தது என்று தான் செய்து வந்த உதவிகளை அதில் தெரிவித்திருந்தார்.

ஒருநாள் வருமானத்துறைக்கு என்.எஸ். கிருஷ்ணனின் உதவியாளர் கணக்கு களை ஒப்படைக்க கொண்டு போனார். கணக்குகளை வருமானவரித்துறை அதிகாரிக்கு படித்துக் காட்டினார். அப்பொழுது மற்றவர்களுக்கு உதவி செய்ததையும், பணம் கொடுத்ததையும் படித்துக் காட்டுகிறார். 'என்ன இந்த கிருஷ்ணனின் கணக்கில் எப்பொழுது பார்த்தாலும் அவனுக்கு உதவி செய்தேன், இவனுக்கு உதவி செய்தேன் என்று கணக்கு காட்டுகிறார்கள். ஒரு வேளை வந்த வருமானத்தை மறைத்து பொய் கணக்கு காட்டுகிறார் களோ? மற்றவர்களுக்கு இந்த கிருஷ்ணன் உண்மையில் உதவிசெய்பவர்தானா?' என்பதைக் கண்டறிய வருமானவரித்துறை அதிகாரி கணக்கு கொடுக்க வந்த உதவியாளரிடம், "தம்பி கொஞ்சம் நேரம் இருங்க ஒரு வேலை இருக்கு அதை முடித்துவிட்டு வந்து உன் கணக்கைச் சரி பார்க்கிறேன்," என்று கதவைச் சாத்திவிட்டு வெளியே கிளம்புகிறார். வீதியில் வந்து நின்ற அந்த அதிகாரி வழியே போன குதிரை வண்டியை மடக்கி ஏறிக் கொள்கிறார். (அப்பொழுதெல்லாம் குதிரை வண்டி பயணம் தான்) நடிகர் என்.எஸ். கிருஷ்ணன் வீட்டுக்குப் போங்க என்று குதிரை வண்டிக் காரனிடம் வழி சொல்கிறார். குதிரை வண்டியும் வேகமாக வந்து கலைவாணரின் வீட்டுமுன் வந்து நிற்கிறது. வண்டியில் வந்திறங்குபவரை வாசல் திண்மையில் அமர்ந்திருந்த கலைவாணர், வந்திருப்பவர் யாரென்று கூடத் தெரியாமல் எழுந்து வந்து "வாங்க, வாங்க... என்ன விஷயமா என்னைத் தேடி வந்திருக்கிங்க?" என்று கேட்கிறார்



அதற்கு வந்த வருமான வரித்துறை அதகாரி ஐயா, "நான் ஒரு ஏழைங்க... எனக்கு ஒரே பொண்ணு. கல்யாணத்துக்கு மாப்பிள்ளை தேடினேன். நல்ல இடம் கிடைச்சிருக்கு. என் பொண்ணுக்கும் மாப்பிள்ளையை ரொம்பப் பிடிச்சிருக்கு. என் வசதிக்கு மாப்பிள்ளை வீட்டில் கேக்கிற அளவுக்கு நகை போடமுடியவில்லை. அதனால கல்யாணம் நின்னுடுமோனு பயமா இருக்கு. உங்களப்பத்தி கேள்விப் பட்டிருக்கேன். அதான் உதவி கேட்டு வந்திருக்கேன். என் பொண்ணோட வாழ்க்கை உங்க கையிலதான் இருக்கு..", என்று சொன்னவர் கலைவாணரைக் கையெடுத்து கும்பிட்டு நின்றார். அந்தப் பெரியவர் சொன்ன வார்த்தையும் கேட்ட உதவியும் கலைவாணரைத் துடிக்கவைத்து விட்டது. "அடடா... என்ன இதுக்காகவா கலங்கி நிக்கிறீங்க. "பயப்படவேண்டாம்... நகைக்காக உங்க பொண்ணோட கல் யாணம் நிக்கக் கூடாது. நல்ல படியாக நடத் துங்க.. அதுக்கு என்ன செலவு ஆகுமோ நான் கொடுத்துடறேன். பையன் வந்துடட்டும்," என்று கலைவாணர் பேசிமுடிப்பதற்குள் வந்த வருமான வரித்துறை அதிகாரி எழுந்து கொள்கிறார். "என்னை மன்னிக்கவும், நான்தான் இந்த ஊர் வருமான வரித்துறை அதிகாரி. உங்க பையன் கொண்டு வந்த கணக்கைப் பார்த்தேன். எல்லா பக்கத்திலும் அதுக்கு உதவி, இதுக்கு உதவி என்று போட்டிருந்தது. இப்படியெல்லாம் தொடர்ந்து யாரும் உதவி செய்ய மாட்டாங்க. வாங்க முதல்ல வந்து பலகாரம் சாப்பிடுங்க. வெற்றிலை போடுங்க. அதுக்குள்ள என்னோட உதவியாளன் வருமானவரித்துறை வரைக்கும் போயிருக்கான். அவன் வந்துடட்டும்... அவனுக்கு தான் எல்லாம் தெரியும். வாங்க முதலில் சாப்பிடுங்க...," என்று வீட்டிற்குள் அழைத்துப் போகிறார். அவர் சாப்பிட பலகாரம் கொடுக்கிறார். அதன்பிறகு வெற்றிலையை மடித்துக் கொடுத்து 'சாப்பிடுங்க' என்று சொல்லிவிட்டு, அது உண்மைதானா என்பதை தெரிந்து கொள்ளத்தான் நான் வந்தேன். என்னை மன்னிச்சுடுங்க... உங்க வள்ளல் குணத்தைப் புரிந்து கொண்டேன். இனி இந்த ஊரில் நான் வருமான வரித்துறை அதிகாரியாக நான் இருகின்ற வரை நீங்க செய்கின்ற உதவிகளுக்கு வருமானவரி விலக்கு அளிக்கின்றேன்," என்று கூறிவிட்டுச் சென்றார். அவர் சொன்னபடியே அந்த ஊரில் இருக்கின்றவரை சொன்னபடி செய்தார். கஷ்டம் என்று வருகிறவர்களுக்கு அள்ளிக் கொடுக்கும் வள்ளல் குணத்தை எம்.ஜி.ஆர். அவர்கள் இவரிடமிருந்துதான் கற்றுக் கொண்டார். இந்த அரிய நற்குணவான் அதே போல, வாரிக் கொடுக்கும் வள்ளல் தன்மையில் தனது வாரிசு என எம்ஜிஆரைத்தான் அறிவித்தார் கலைவாணர் என்எஸ்கே!

# திருமணத்தின் முன்பே வளர்ப்புத் தந்தையான மணமகன்!



மத்தியபிரதேச மாநிலம் இந்தூரை சேர்ந்தவர் ஆதித்யா திவாரி. சொஃப்ட் வேர் என்ஜினியரான ஆதித்யாவுக்கு, 'திருமணத்திற்கு முன்னரே ஆட்டிசம் பாதித்த ஒரு குழந்தையை தத்தெடுத்து வளர்க்க வேண்டும். அதன் மூலம் அந்த நோய் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்த வேண்டும்' என்ற ஆசை இருந்தது. ஆனால் மத்திய பிரதேசத்தில், 30 வயது இருந்தால்தான் குழந்தையை தத்தெடுக்க முடியும். திவாரிக்கோ வயது 28 தான் ஆகியிருந்தது. இந்த நிலையில் கடந்த அக்டோபர் மாதத்தில், 25 வயது பூர்த்தியடைந்திருந்தாலே, குழந்தையை தத்தெடுக்கலாம் என சட்டத் திருத்தம் கொண்டு வரப்பட்டது. இதனைத் தொடர்ந்து பின்னி என்ற ஒன்றரை வயது ஆட்டிசம் பாதித்த குழந்தையை ஆதித்யா திவாரி தத்து எடுத்துள்ளார். தற்போதுதான் அதற்கான சட்டபூர்வ நடைமுறைகள் முடிவடைந்தன. பின்னியின் பெயரை அவினேஷ் என மாற்றினார் திவாரி. தற்போது இவர்தான் நாட்டிலேயே இளவயது பேச்சிலர் தந்தை.

முதலில் ஆதித்ய திவாரியின் முன்மாதிரியான முயற்சிக்கு, குடும்பத்தில் அனைவருமே முட்டுக்கட்டையாக இருந்துள்ளனர் ஆதித்ய திவாரி முடிவில் உறுதி யாக இருக்க, அவரது பெற்றோரும் மனம் மாறி விட்டனர். தன்னைத் திருமணம் செய்து கொள்பவர் தன்னைப் போலவே அவினேஷ் மீது நேசம் காட்டுவாரா என்ற கவலை மட்டுமே அவருக்கு இருந்தது. அவரது விருப்பத்தையும் மனதையும் புரிந்து கொண்ட பெண் ஒருவர், இப்போது அவினேஷை திருமணம் செய்து கொள்ள சம்மதித்துள்ளார். இவர்களது திருமணம் இந்தூரில் நடைபெற்றது.


இந்த திருமணத்தில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஆதரவற்றோர், ஆதரவற்ற குழந்தைகள் பங்கேற்றனர். ஆயிரத்துக்கு மேற்பட்ட தெருநாய்களும், சில விலங்குகளும் கூடபங்கேற்றன. அனைவருக்கும் திருமண விருந்து வழங்கப்பட்டது. திருமணத்தை முன்னிட்டு 100 மரக்கன்றுகள் நடப்பட்டன. திருமணத்துக்கு வந்த உறவினர்களிடம் இருந்து புத்தகங்களும் மருந்துகளும் மட்டுமே பரிசாக பெறப்பட்டன.




# இணைய உரையாடலும் அதன் சிறப்பம்சங்களும்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

உரையாடல்களில் நீண்ட வசனங்கள் அல்லது முழுமையான வாக்கியங்கள் எழுதுவது பாரம்பரியம் அல்ல. அதற்கென சில சுருக்க எழுத்துக்கள் உண்டு. இதனால் நேரம் சிக்கனப் படுத்தப்படுகிறது. மீதப்படுத்தப்படுகிறது. அடுத்து கணினி உரையாடல்களில் பயன்படுத்தப்படும் சுருக்க எழுத்துக்ள் சிலவற்றையும் குறியீடுகளையும் தருகிறோம். இவற்றில்பல சர்வதேச அங்கீகாரம் பெற்றவை.





| (சொல்) | (பொருள் அல்லது அர்த்தம்) |
|---|---|
| AIM | AOL Instant Messenger |
| abc | always be careful(எப்போதும் கவனமாக இருங்கள்) |
| abt | About (பற்றி) |
| acc | Account (கணக்கு) |
| adn | any day now (எந்த நாளும் இப்போது) |
| afaik | as far as I know (எனக்கு தெரிந்த வகையில்) |
| afk | away from keyboard (விசைப்பலகையை விட்டு விலகி) |
| aitr | adult in the room (வயதுவந்தவர் உரையாடல் அறையில் உள்ளார்) |
| aka | also known as (இப்படியும் அறியப்பட்டவர்) |
| alol | actual laugh out loud (உண்மையில் சிரிப்புக்குரிய விடயம்) |
| g2cu | good to see you (சந்தித்தது நல்லது) |
| g2g | got to go (செல்லவேண்டி இருக்கிறது) |
| g2gp | got to go pee (மலசலகூடம் செல்ல வேண்டும்) |
| g'morning | good morning (காலை வந்தனம் ) |
| g'night | good night (மாலை வணக்கம் ) |
| ga | go ahead (மேலே சொல்லுங்கள் ) |
| gal | get a life (வாழ்கையை பெற்றிடு) |
| gb | God bless (கடவுள் ஆசீர்வதிப்பாராக ) |
| b | Be (போல்) |
| b&w | black and white (கறுப்பும் வெள்ளையும்) |
| b-day | Birthday (பிறந்தநாள்) |
| b-p | sunglasses w/ tongue (சூரிய வெளிச்ச கண்ணாடி) |
| b/c | Because (ஏனென்றால்) |
| b/l | buddy list (பெயர் பட்டியல்) |
| b/w | Between (இடையில்) |
| b4 | Before (முன்னர்) |
| b4n | before now (இதற்கு முன்னர்) |
| baibai | bye bye (விடை பெறுகிறேன்) |
| bb | Baby (சிறுபிள்ளையே) |

**முக்கிய குறிப்பு** : இணைய உரையாடல்களில் ஒருபோதும் முக்கிய அந்தரங்க தகவல்களை வெளிப்படுத்த வேண்டாம். உதாரணம் : கடவுச்சொல், கணக்கு இலக்கம், அடையாள அட்டை எண், உங்களது வேறு பெயர்கள், பெற்றோரின் பெயர்கள் என்பன.

இணைய உரையாடல்களை நீண்ட நேரம் மேற்கொண்டால் உங்கள் கணினியின் செயல்பாடுகள் பெரிதும் பாதிக்கப்படும். இணைய உரையாடல்களுக்கு சாதாரணமாக கூடுதல் வளங்கள் தேவைப் படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. எனவே உங்கள் உரையாடல்களை 4 தொடக்கம் 5 மணித்தியாலங்களுக்கு வரையறுத்துக் கொள்ளுங்கள்.

இணைய உரையாடல்களில் சில வடிவங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

ஒரு இணைய உரையாடலில் இருவர் கலந்து கொள்வர். பங்குபற்றுவோரின் கருத்துக்கள் ஆங்கிலத்தில் டைப் செய்யப் படும். இதனை உள்ளூர் மொழியிலும் வெளிப்படுத்தலாம். ஆனால் நியம் அல்லது UNICODE எழுத்துருக்களிலேயே எழுத வேண்டும். புல செய்திகளையும் கருத்துக்களையும் குறகிய நேரத்தில் வெளிப் படுத்துவதற்கு இலகுவாக்க, சுருக்க எழுத்துக்கள் உண்டு. அவற்றில் சில உதாரணங்களை மேலே தந்துள்ளோம்.




இணைய உரையாடல்களில் பல் வேறு வசதிகள் உண்டு. நீங்கள், முகங்களைப் பார்க்கலாம். அதேபோன்று குரல் பரிமாற்றம் செய்யலாம். புகைப்பட பரிமாற்றல்களை மேற்கொள்ளலாம்.

ஒரே தடவையில் மேலே காட்டப்பட்ட பல திரைகளை திறந்து, பல தரப்பினருடன் உரையாடல்களை மேற்கொள்ளலாம். ஆனால் கூடுதலான கணினி வளங்கள் விரயமாகும். ஆனால் இவ்வாறான உரையாடல்களை நீண்டநேரம் மேற்கொண்டால், அதன் பின்னர் உடனடியாக, தரவிறக்கம் செய்யப்பட்ட வேண்டத்தகாத தகவல்களை அகற்றிகொள்ள வேண்டும். இது தொடர்பான விளக்கங்களை முன்னொரு ஆக்கத்தில் வழங்கியிருந்தேன்.

சர்வதேச தொலைபேசி அழைப்புகளுக்கு செலுத்தப்படும் கட்டணங்களை விட, பெருமளவு குறைந்த செலவுடன், உரையாடல் சேவைகளை மேற்கொள்ள, இணைய உரையாடல் உதவி செய்கிறது. சர்வதேச தொடர்பாடல் முறைகளின் புதிய பரிணாம வளர்ச்சியே இந்த இணைய உரையாடலாகும்.

**குறிப்பு : இண்ணய மற்றும் கணனி குற்றச்செயல்கள் பெரும்பாலும் இணைய உரையாடல்கள் மூலமே ஏற்படுகின்றன என்பதை கவனத்தில் கொள்க.**

**உங்களுக்கு கணினி தொடர்பான சந்தேகங்கள் மற்றும் கேள்விகள் இருப்பின் நீங்கள் கீழ் காணும் மின்னஞ்சல் முகவரிக்கு உங்கள் கேள்விகளை அனுப்பி வைக்கலாம்.**

yogaraj35@gmail.com
ஜெ.யோகராஜ் (**email : yogaraj35@gmail.com**)



# தொடுகை திரையில் பிரச்சினையா?

இன்றைய காலகட்டத்தில் மடிக்கணினி, டப்லட், கைபேசி என அனைத்து கருவிகளிலும் டச் ஸ்கிரீன் வந்து விட்டது.

டச் ஸ்கிரீன் முதல்முறை பயன்படுத்தும் போது வேகம் சீராக இருக்கும். ஆனால் நாளடைவில் வேகம் குறைந்து ஹேங் ஆக ஆரம்பித்து விடும்.

இதனை சரி செய்ய எளிய வழி முறைகள்:

திடீரென கருவி வேலை செய்யாமல் ஹங் ஆகும் போது சிறிது நேரம் அமைதியாய் இருந்து பின்பு கருவியை ரீஸ்டார்ட் (restart) செய்ய வேண்டும். இதன் மூலம் உண்மையான பிரச்சினை என்னவென்று அறிந்து கொள்ளலாம்.

சில சமயம் கருவியின் தொடுதிரை நன்றாக வேலை செய்யும், பயன்படுத்தும் செயலியில் கூட பிரச்சினை இருக்கலாம். எனவே அறிந்து கொண்டு பின்னர் கருவியில் இன்ஸ்ரோல் (install) செய்துள்ள தேவையில்லாத அப்ளிகேஷன்களை அன் இன்ஸ்ரோல் (Un Install) செய்து விட வேண்டும்.

இதனால் ரேம் மெமரி (Ram Memory) அளவு அதிகமாகி கருவி சீரான வேகத்தில் இயங்கும். அளவுக்கு அதிகமாக செயலிகளை கருவியில் இன்ஸ்ரோல் (install) செய்து வைக்கக் கூடாது.

பின்பு நீங்கள் பயன்படுத்தும் கருவியின் தொடுதிரையை உங்களால் கழற்றி மாட்ட முடியும் என்றால் முயற்சி செய்து பார்க்கலாம். ஆனால் கவனமாக கையாள்வது நல்லது.

மேலும், இந்த வழிமுறைகள் பெரும்பாலான கருவிகளுக்கு பொருந்தும்.

# வலிகாமத்தில் இடம் பெயர்ந்தவர்களுக்கு வீடு

திட்டமிட்டபடி நூறு வீடுகள் எதிர் வரும் செப்ரெம்பர் 15 ஆம் திகதி பயனாளிகளுக்கு கொடுக்கப்படும் என வட மாகாண இராணுவக்கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தினச்செய்திக்கு கூறினார்.


காங்கேசன்துறையில் அமைந்திருக்கும் பழைய சீமெந்து தொழிசாலையில் மொத்தமாக உள்ள 650 ஏக்கர் நிலத்தில் 65 ஏக்கர் நிலத்தில் வலிகாமத்தில் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழும் 100 குடும்பங்களுக்கு வழங்க சிறைச்சாலை மறு சீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல் அமைச்சு முன்வந்துள்ளது.

இந்த அமைச்சின் திட்டத்தை நிறைவேற்றும் திட்டங்களில் ஒன்றையே யாழ் மாவட்ட இராணுவம் நிறைவேற்ற முன் வந்துள்ளது. அதன் பிரகாரம் சென்ற யூலை மாதம் 11 ஆம் திகதி பழைய சீமெந்து தொழிச்சாலைக்கு வழங்கப்பட்ட 65 ஏக்கர் காணியில் 100 வீடுகள் கட்டும் நடவடிக்கைகளை யாழ் மாவட்ட கட்டளைத் தளபதி அவரது இராணுவ வீரர்களகளுடன் ஈடுபட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக கட்டளைத் தளபதி மகேக்ஷ் சேனநாயக்க கூறுகைளில் மொத்தமாக 133 வீடுகளுக்கான நிலம் துப்பரவு செய்யப்பட்டுள்ளது எனவும் தங்களுக்கு 100 வீடுகள் கட்ட தான் கோரிக்கை விடப்பட்டுள்ளது என்றும் கூறினார்.

இந்த 100 வீடுகளும் பிறிகேடியர் மேவின் பீரிஸ் தலைமையிலான 51ஆவது பிரிவு வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த வீடுகள் கட்டுவதற்கு தேவையான கட்டிடப் பொருட்கள் யாழ் மாவட்ட அதிபர் ஊடாக் வழங்குவதாக திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் மாவட்ட அதிபர் தெரிவு செய்த கட்டிட பொருட்களின் விநியோகஸ்தர்கள் பொருட்களை உரிய காலத்தில் வழங்காததால் கட்டிட வேலைகள் ஆறு ஏழு நாட்கள் பின் தங்கிவிட்டதாக அவர் கூறினார்.

ஒவ்வொரு வீடும் 2 பரப்பு காணியில் கட்டப்படுகிறது. இந்த வீடு ஒவ்வொன்றும் 540 சதுர அடியில் கட்டப்படுகின்றன என்று கூறினார். அதில் 2 படுக்கை அறைகள் ஒரு எல் (L)வடிவத்தில் வரவேற்பறை ஒரு சமயல் அறையும் வீட்டிற்கு பின்பக்கம் மலசல கூடமும், குளியல் அறையும் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.




மேலும் ஒவ்வொரு வீட்டிற்கும் 100 லீற்றர் கொள்ளக்கூடிய தண்ணீர்த் தொட்டியும் நிர்மாணிக்கப்படவுள்ளன. தண்ணீர்த் தொட்டிக்கு இலங்கை கடற்படையினரின் 3 கிணற்றில் இருந்து நீர் கொண்டு வந்து நிரப்பப்படும் என்றும் கூறினார்.




இந்த வீடு ஒன்றைக் கட்டுவதற்கு ரூபா எட்டு லட்சத்து ஐம்பதாயிரம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இன்றுள்ள நிலையில் ஒரு வீடு ஒன்று நிர்மாணிக்கப்பட்ட பின்பு அந்த நிலமும் காணியும் உட்பட வீடு ஒன்றின் பெறுமதி ரூபா. 4,362,240/- ஆகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. காணி ஒன்றின் பெறுமதி ரூபா. 2,154,240/- என்றும் அதனை கட்டி முடிக்க மொத்தமாக ரூபா. 2,080,050/- முடியும் என்றும் கணக்கிடப்படுகின்றது.



இந்த வீடுகள் ஆரம்பத்தில் ஆகஸ்ட் 15 ஆம் திகதி கட்டி முடிப்பது என்று திட்டமிட்டிருந்தது. கட்டிட பொருட்கள் வழங்க தாமதம் ஏற்பட்டதால் இந்த திட்டத்தை நிறைவேற்ற செப்ரெம்பர் 15 ஆம் திகதி ஆகும் என்று தற்சமயம் முடிவுசெய்யப்பட்டுள்ளது என்று கட்டளை தளபதி மகேஷ் சேனநாயக்க கூறினார்.

இந்த புதிய வீட்டு திட்டத்தில் ஒரு ஏக்கரில் விளையாட்டு மைதானமும், குடியேற இருக்கும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கான ஒரு முன்பள்ளியும், மீன் - மரக்கறி சந்தையும் ஒரு பொலிஸ் போஸ்டும் மற்றும் சனசமூக நிலைய கட்டிடமும் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும் இந்த வளவில் ஏற்கனவே ஒரு கோயில் இருக்கிறது. அந்த கோயில் திருத்தி அமைக்கப்படவுள்ளது. அத்துடன் ஓர் சுடு காடும் அமைத்து கொடுக்கப்படும் என்று தெரிய வருகிறது.

இந்த வீடு கட்டுவதற்கு ஒவ்வொரு வீட்டிற்கும் 10 இராணுவ வீரர்கள் ஒதுக்கப்பட்டுள்ளனர். அது மாத்திரமின்றி அந்த வீட்டின் பயனாளிகளும், வேலையை செய்ய முன்னாள் விடுதலை புலிப் போராளிகளும் அடங்குவார்கள் என திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் முன்னாள் விடுதலை புலி போராளிகளின் பெயர்கள் கிடைத்ததும் அவர் கள் இந்த வேலைத் திட்டத்தில் இணைக்கப் படுவார்கள் என்று இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் மகேஷ் சேனநாயக்க கூறினார்.



# ஆன்மீகம்

## விளக்கேற்றிய பின் தலை வாரக்கூடாது ஏன் தெரியுமா?



மாலை நேரம் வழிபாட்டுக்குரிய நேரம். விளக்கேற்றும் வேளையில் திருமகள் இல்லத்தில் உறைந்திருப்பதாக ஜதீகம். அந்தச் சமயத்தில் பெண்கள் கூந்தலை விரித்தபடி நிற்பது வீட்டுக்கு நல்லதல்ல. எனவே விளக்கு வைப்பதற்கு முன்பாக மாலை 5.30 ற்குள் பெண்கள் தலைவாரி முடிந்து நெற்றயில் திலகமிட்டுக் கொள்வது சிறப்பைத் தரும் என்று கூறுகின்றனர் ஆன்றோர். திருமகள் வீட்டில் வாசம் செய்ய வேண்டும் என்று விரும்புபவர்கள் தினமும் மாலையில் வீட்டின் பூஜை அறையிலும் வாசலிலும் நெய் தீபம் ஏற்றி வழிபட வேண்டும். தீபம் ஏற்றும்போது பின்புற கதவு இருந்தால் அதை மூடி விட வேண்டும்.

## விபூதி, குங்குமத்தை கோவிலிலேயே விடுவது சரியா?

கோவிலில் விபூதி, குங்குமம் தருவதே நம்மைச்சார்ந்தவர்களையும்இறைவனது பிரசாதம் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தில்தான். இறைவனின் பிரசாதத்தை அங்கேயே விட்டுவிடுவது என்பது அவனது அருளை வேண்டாம் என்று மறுப்பதற்கு சமம். குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாக இணைந்து கோவிலுக்கு வந்திருக்கிறோம், எல்லோரும் விபூதி குங்குமப் பிரசாதத்தை நெற்றியில் இட்டுக் கொண்டாகிவிட்டது அல்லது வீட்டில் யாருமில்லை என்றால் கூட, அங்கேயே விட்டு விட்டு வரக்கூடாது. ஆலயத்தில் நாம் பெறும் விபூதி, குங்குமப் பிரசாதங்களை வீட்டிற்கு எடுத்துவந்து பத்திரப்படுத்தி தினசரி நெற்றியில் இட்டுக் கொள்வதுதான் நல்லது.



## ஆன்மீக தகவல்கள்

1. மகாலட்சுமி அமர்ந்த நிலையில் உள்ள படம். விக்கிரகம் ஆகியவற்றையே வீட்டில் வைக்க வேண்டும்.
2. வீட்டு பூஜையில் கற்பூர தீபம் தானே குளிர்ந்து விடுவதுதான் நல்லது. நாம் அணைக்கக் கூடாது.
3. திருக்கோவிலின் பிரதான வாசல் வழியே தான் கோயிலுக்குள் செல்ல வேண்டும்.
4. அர்ச்சனைப் பொருட்களை இடது கையால் எடுத்துச் செல்லக் கூடாது
5. கோவிலிலிருந்து வீட்டிற்கு வந்ததும் சிறிது நேரம் கழித்துக் கை, கால்கள் கழுவலாம். ஆனால் குளிக்கக் கூடாது.
6. எலுமிச்சம் பழத் தீபம் விளக்கைக் கோயிலில் மட்டுமே ஏற்ற வேண்டும். வீடுகளில் ஏற்றக் கூடாது.
7. சுவாமிக்கு எடுக்கும் ஆரத்தியில் சுண்ணாம்பு சேர்க்கக் கூடாது. மனிதர்களுக்கு எடுக்கும் போது சுண்ணாம்பு சேர்க்கலாம்.
8. சனி பகவானுக்கு வீட்டில் எள் விளக்கு ஏற்றக் கூடாது.
9. இறைவன் சன்னிதி போன்ற தெய்வீக அலை உள்ள இடத்தில் யோசித்தால் நல்ல முடிவு கிடைக்கும்.



# சந்தர்ப்பவாதிகள்

## அத்தியாயம் 12

சில சமயங்களில் நமக்குப் பிடிக்காததைச் செய்யும் சூழ்நிலை வந்துவிடுகின்றது. ஏதோ ஒரு வேகத்தில் அதைச் செய்து விட்டாலும், பின்பு மனச்சாட்சியின் உறுத்தல், ஏன் செய்தோம் என்று மனம் நொந்துகொள்ள வைத்துவிடுகின்றது.

தன் மனைவி சுசீலாவுடன் உமாவைப் பெண் பார்த்துவிட்டு வந்த சித்திரவேலுக்கு தர்மசங்கடமான நிலை. தன் மகன் விடயத்தில் இப்படியொரு திருப்பம் வரும் என்று அவர் எதிர்பார்த்திருக்கவில்லை. உமாவை அவருக்கும் சுசீலாவிற்கும் நன்கு பிடித்திருந்தது. தன் மகனுக்கு வேறொரு இடத்தில் சரி வந்திருக்கின்றது என்பதை அவசியம் உமாவிற்கு தெரியப்படுத்த வேண்டியது தன் கடமையென்று அவர் நினைத்தார். எதிர்பார்ப்புகளை வளர்ப்பது மகாபாவம் என்று அவர் மனம் சொல்லியது.

ஆனால் மீணடும் உமா வீட்டிற்குப் போக அவர் மனம் ஒப்பவில்லை. தொலைபேசி மூலம், தன் நிலைமையை வெளிப்படுத்தவும் இஸ்டம் இல்லை. இந்தக் காரணங்களுக்காகத்தான், விபரமாக ஒரு கடிதத்தை எழுதி உமாவுக்கு சித்திரவேல் அனுப்பியிருந்தார். ஏன் இப்படிச் செய்தோம் என்று குற்ற உணர்வு தலைதூக்கினாலும், மேலும் காத்திருப்புகளுக்கு இடம் வைக்காமல், பெண்ணுக்குத் தெரியப்படுத்துவது அவசியமானதும், அவசரமானதுமாக அவர் கருதினார்...

முழு வீட்டுக்கும் பெயின்ட் அடிக்கும் வேலை நடந்து கொண்டிருந்தது. நல்ல காரியம் நடக்கின்றதோ இல்லையோ, மகன் வரப்போகின்றான், கனடாவிலிருந்து பெண் வீட்டாரும் வரப் போகின்றார்கள். ஒரு இலட்சத்தை இந்த வேலை விழுங்கிவிடும் என்றார்கள். பரவா யில்லை. கடந்த ஏழு வருடங்களாக எந்தப் பூச்சு வேலையும் காணாத வீடு, இப்பொழுது அழகுபடுத்தப்படுவதால் எந்த நஷ்டமும் இல்லை என்று மனதைச் சமாதானப் படுத்திக் கொண்டார். வெளி மதிலுக்கு என்ன நிறத்தில் பெயின்ட் அடிப்பது என்று வேலைக்கு வந்தவர்களோடு பேசிக் கொண்டிருந்தபோது, தெருவில் வந்த ஓர் ஓட்டோ இவர் அருகில் வந்ததும் நிறுத்தப் பட்டது.

“அட சித்திரவேல்தானே நீங்கள்....” என்று ஒருவர் குரல்கொடுத்தபடி ஓட்டோவிற்குள் இருந்து தலையை நீட்ட, சித்திரவேல் திருமபிப் பார்த்தார்.

“ஆமாம் நான்தான் சித்திரவேல்.... நீங்க... ”.

குழப்பம் மேலிட வந்தவரை நோக்கினார் சித்திரவேல்.

“அட கடவுளே. இப்படியா தெருவில சந்திக்க வேணும். நான்தான் மணியன். உன்னோட ஒண்டாப் படிச்ச சுப்பரமணியன்... ”


முகத்தில் சந்தோஷம் பூரிக்க, வாகனத்திலிருந்து இறங்கியவர், சித்திரவேலை ஆரத் தழுவிக்கொண்டார்.

“அட மணியமே.. ஒல்லிக் குச்சி மாதிரி வகுப்பில இருந்த நீ அடையாளம் தெரியாம மாறிப் போயிட்டியே.... ”

பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா என்பார்கள்.

ஒன்றாகப் படித்தவர்கள். நல்ல நண்பர்கள். மணியம் இளம் வயதிலேயே வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டதால், இருவருக்கும் இடையிலான தொடர்பு கள் அறுந்து விட்டன. மணியம் கனடாவில்தான் இருக்கின்றார். சவுதி அரேபியா, ஹொலன்ட், கனடா என்று தன் இளமையின் பெரும்பகுதியை வெளிநாடுகளிலேயே கழித்துவிட்ட அவர் இப்பொழுது கனடாவில்தான் நிரந் தர வசிப்பிடமாம். கடந்த சில வரு டங்களாக முதுகு வலி. யாழ்ப் பாணத்தில் ஒரு தடவை ஆமிக்காரன்களட்டை அடிவாங்கிய ஊமைக் காயம் இப்பொழுது ஐம்பதுகளில் தலை காட்டி, பெரிய தொல்லையைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றதாம்.

நாட்டு வைத்தியத்திற்காவது சரிவருகுதா பார்ப்பம் என்ற முடிவோடு, 3 மாதங்கள் தங்கியிருந்து வைத்தியம் செய்யத் தீர் மானித்திருக்கிறாராம்.



“சரி மணியம் உனக்கு எத்தனை பிள்ளையள்? ”

“ஒரு பொடியன் தான். வயது பதின் மூன்றாகுது. லேட்டாத்தான் கல்யாணம் செஞ்சனான். என்ர மனுசி கனடியப் பிள்ளைதான். தமிழ் கலாச்சாரத்தில் நல்ல பிடிப்பு. தமிழ் நல்லாக் கதைப்பா. எங்கிட கல்யாண வீடுகள், சாமத்திய வீட்டுக் கொண்டாட்டங்கள் ஒண்டையும் மிஸ் பண்ணிறதில்லை. ”

மணியம் திறந்த மனதோடு தன் குடும்பப் புதினங்களை நண்பரோடு பகிர்ந்து கொண்டார். சித்திரவேலுக்கோ இவர் கதை வேடிக்கையாக இருந்தது. கனடியப் பெண் தமிழ் கதைக்கிறாள், தமிழ்க் கல்யாண வீடுகளுக்குப் போகிறாள் என்ற சங்கதிகளெல்லாம் அவருக்குப் புதினமாக இருந்தது.

“மணியன் கேட்கிறனெண்டு கோபிக்காதேயும். உம்மிட மனுஷி பாவாடை சட்டையா, அல்லது டிரவுசரா? ”

மணியன் வாய்விட்டுச் சிரித்தார்.

“சித்திரவேல்அவள்ஒருசாரிப்பைத்தியம். அலுமாரி நிறையச் சாரியள்தான். ”


இதைச் சொல்லிவிட்டு மீண்டும் மணியன் பலமாகச் சிரித்தார். அந்த நேரம் சுசீலா தட்டில் வடைகளுடன் அங்கே வந்தாள். “வணக்கம்” என்று முகம் மலர்வோடு சொல்லிவிட்டு, தேநீர் கொண்டுவர அடுக்களைக்கு விரைந்தாள்.

“சரி சித்திரவேல்... என்ன வீட்டுச் சோடனையெல்லாம் பெரிசாக் கிடக்கு... வீட்டில ஏதாவது விசேஷமே...? ”

“அப்படியொண்டுமில்லை.... பல வருஷங்களாப் பெயிண்ட் அடிக்காத வீடு. இலண்டனிலிருந்து மகனும் வாறான்....” என்று தன் கதையைத் தொடங்கிய சித்திரவேல் கனடாவில் ஒரு பெண்ணைப் பார்த்திருப்பதையும், அவர்கள் வீட்டுக்கு வர இருப்பதையும் சொன்னார்.

சுசீலா கொண்டு வந்த வடையை ரசித்து ருசித்துச் சாப்பிட்ட மணியம் வீட்டில செய்த வடை போல கிடக்கு. வீட்டுக்காரி சமையலில கெட்டிக்காரி போல கிடக்கு என்றவர்,

“சரி கனடாவில எந்த ஏரியாவில பெண்ணைப் பார்த்திருக்கிறியள்..”?



தனக்கு நிவேதா பற்றித் தெரிந்த விபரத்தை அப்படியே ஒப்புவிக்கலானார் சித்திரவேல்.

மணியன் திடீரென அவர் பேச்சில் குறுக்கிட்டார்.

“அந்தப் பெட்டையின்ர பெயர் தெரியுமே சித்திரவேல்? ”

“நிவேதா... ”

“என்ன நிவேதாவா..... ஓ.. ஐ ஸீ.... ”

“ஏன் உமக்கு இந்த நிவேதாவைத் தெரியுமே? ”

“என் பெண்டாட்டி கிறிஸ்ரீனாவுக்குத் தெரியும். ஒரு தடவை வீட்ட வந்திருக்கிறாள் இந்த நிவேதா.. ”

“பெட்டை எப்பிடி? உங்களுக்கு அம்மா அப்பாவைத் தெரியுமே... ”

“அதுதான் நான் சொன்னேனே. ஒரு லைப்ரரியில சநதிச்சு என்ர மனுஷியும் இந்தப் பிள்ளையும் சினேகிதமானவங்க.. இரண்டு பேருமே புத்தகப் புழுக்கள். இநதப் புத்தகங்கள்தான் இந்த இரண்டு பேரையும் சினேகிதிகளாக்கினது..... ”

கதை தொடர்ந்தது.. கதையோடு கதையாக நிவேதா ஒரு வெள்ளைக்காரப் பொடியனோடுசேர்ந்துதான்வந்தவள்எண்டு ஒரு குண்டை மணியன் போட்டபோது அதிர்ந்து போனார் சித்திரவேல். கனடிய கலாச்சாரத்தின்படி வந்தவன் நிவேதாவின் ஆண்சினேகினாகத்தான்இருக்கவேண்டும் என்ற சந்தேகத்தையும் வெளிப்படுத்தினார் மணியன். மேற்கொண்டு, ஆர்வத்தோடு தொடர்ந்து சித்திரவேலினால் மணியத்தோடு பேசமுடியவில்லை. அவர்கைத்தொலைபேசி இலக்கத்தை வாங்கிக் கொண்டு, கட்டாயம் திரும்ப வீட்டுக்கு வா என்று சொல்லி நண்பனை வழியனுப்பி வைத்தார் சித்திரவேல். அட கடவுளே இண்டைக்குக் காலமைதானே உமாவுக்கு கடிதம் போட்டனான். அங்க ஒரு வெள்ளைக்காரப் பொடியனை வைச்சிருக்கிறவளுக்கு எப்படி என்ர மகனைக் கொடுக்கிறது?

**ஏ.ஜே.ஞானேந்திரன்**

ஈஸ்வரா எனக்கு ஏன் இந்தச் சோதனை? வெண்ணெய் திரண்டு வரேக்கிள தாழி உடையிறதெண்ட கதை இதுதானா? உடனடியாக சத்யனுக்குப் போன் பண்ணி விஷயத்தைச் சொல்ல வேண்டும் என்று தீர்மானித்தார். ஏன் இந்தப் பெட்டை எனக்கு இதை ஒளிச்சவள்? அவருக்கு நிவேதா மீது கடும் கோபம் வந்தது. தான் கட்டிய கோட்டை தன் முன்னே ஒரேயடியாகச் சரிந்து விட்டதாக அவர் நினைத்தார்.

ஒரு வேலையாள் அவரிடம் வந்து, இந்த நிறம் வெளி கேட்டுக்கு ஒகேதானே என்று கேட்டான். எந்தநிறத்தையாவது அடிச்சுத் தொலை தம்பி என்று எரிச்சலோடு அவர் அவனுக்குப் பதில் கொடுத்தபோது, என்ன பிரச்சினை என்று தெரியாமல் குழப்பத்தோடு வேலையாள் அங்கிருந்து நகர்ந்தான்.....

(தொடரும் ...)

---

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## கபாலிடா...

மேலும் கார்கில்ஸ் வங்கி ஒன்றில் ரூபா. 5 000 செலுத்தி வங்கிக் கணக்கு ஆரம்பித்தால் இலவசமாக 7.30 மணி காட்சிக்கு கபாலி படத்தின் ரிக்கட் வழங்கினார்கள்.

இந்த திரையரங்கில் முன் கூட்டியே ஆசன பதிவுகள் செய்யப்படுகின்றன. ஆனால் இருக்கை இலக்கங்கள் பதிவு செய்து தருவதில்லை. இதனால் வசதியான ஆசனங்களை பெறுவதற்கு திரைப்பட ரசிகர்கள் மிகவும் சிரமப்படுவதாக தெரியவருகிறது.

மேலும் கபாலி படம் கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள ராஜா 1, ராஜா 2 ஆகிய திரையரங்குகளில் நேற்று காட்டப்பட்டுள்ளது. இங்கு மொத்தமாக 862 ஆசனங்கள் உண்டு என தெரியவருகிறது. இதில் ராஜா ஒன்றில் 127 பல்கணி ஆசனமும், ராஜா இரண்டில் 100 பல்கனி ஆசனமும் உள்ளன.


இங்கே பல்கனி ரூபா 400, கீழே இருந்து படம் பார்ப்பதற்கு ரூபா 350 கட்டணமாக பெறுவ தாக தெரிய வருகிறது. ஆசன இருக்கைகள் பதிவு செய்யப்பட்டு தான் ரிக்கட்கள் வழங்கப்படுகின்றன.

மேலும் யாழ்ப்பாணத்தில் உள்ள செல்வா திரையரங்கிலும் இந்தப் படம் வெளியிடப்பட்டுள்ளது. இந்த திரையரங்கில் மொத்தமாக 500 ஆசனங்கள் உள்ளன.


காலை 7.30 காட்சிக்குரிய சகல ரிக்கட்டுகளும் ஸ்ரீ லங்கா ரெலிகொம்மிற்கு விற்பனை ஆக்கப்பட்டுள்ளது என்று செல்வா திரையரங்கின் பேச்சாளர் ஒருவர் தினச்செய்திக்கு தெரிவித்தார்.

கபாலி நெருப்புடா..... யாழ்ப் பாணம் முழுவதும் கபாலி தீ பரவுகிறது.

# விளையாட்டு


உசேன் போல்ட்


கேட்டி லெடெக்கி






# ஒலிம்பிக் கில்லிகள்!

உலகின் உச்சபட்ச விளையாட்டுத் திருவிழாவுக்குத் தயாராகிவிட்டது பிறேஸில். 31 ஆவது ஒலிம்பிக் போட்டி ரியோ டி ஜெனீரோ நகரில் ஆகஸ்ட் 5 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கிறது. ஒலிம்பிக் போட்டியை நடத்தும் முதல் தென் அமெரிக்க நகரம் ரியோதான். ஒலிம்பிக் போட்டிகளை காண்பதற்காக மட்டுமே சுமார் ஐந்து லட்சம் பேர் பிறேஸிலுக்குள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

**மைக்கேல் ஃபெல்ப்ஸ்**

ஒலிம்பிக்கின் சூப்பர் ஸ்டார், அமெரிக்க நீச்சல் வீரர் மைக்கேல் ஃபெல்ப்ஸ். 2004 ஆம் ஆண்டு ஏதென்ஸ் ஒலிம்பிக் தொடங்கி 2012 ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக் வரை மூன்று ஒலிம்பிக்களிலும் 22 பதக்கங்கள் வென்று ஒலிம்பிக் போட்டிகளில் அதிக பதக்கம் வென்ற வீரர் என்ற சாதனையுடன் முதல் இடத்தில் இருக்கிறார் ஃபெல்ப்ஸ்.

2012 ஆம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக் போட்டிகளோடு ஓய்வுபெறுவதாக அறிவித்த ஃபெல்ப்ஸ், இரண்டே ஆண்டுகளில் முடிவை மாற்றிக்கொண்டு 2016 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளுக்குத் தயாராக இருக்கிறார். இந்த முறையும் ஃபெல்ப்ஸ் ஆறு பிரிவுகளில் பங்கேற்க தகுதி பெற்றிருக்கிறார். இதனால் ஃபெல்ப்ஸின் தனிநபர் பதக்கக் கணக்கு யாராலும் எட்டிப்பிடிக்க முடியாத இடத்துக்குச் சென்றுவிடும் என எதிர்பார்க்கலாம்.

**கேட்டி லெடக்கி**

19 வயதான இந்தக் குட்டிப்பெண்தான் 400, 800, 1,500 மீற்றர் நீச்சல் போட்டிகளில் உலக சாதனைப் படைத்திருக்கும் நம்பர் ஒன் வீராங்கனை. லண்டன் ஒலிம்பிக்கில் 15 வயது பெண்ணாக 800 மீற்றர் ஃப்ரீ ஸ்டைல் நீச்சல் போட்டியில் தங்கப்பதக்கம் வென்ற லெடக்கி, இந்த முறை கலந்துகொள்ளும் அத்தனை பிரிவுகளிலுமே பதக்கம் வெல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

**உசேன் போல்ட்**

ஒலிம்பிக் போட்டிகளில் 100 மீட்டர் ரேஸ்தான் பரபர க்ளைமாக்ஸ். இந்த முறையும் 100 மீட்டர் ரேஸை வென்று உலகின் வேகமான மனிதன் என்னும் சாதனையைத் தொடரும் திட்டத்தில் இருக்கிறார் ஜமைக்காவின் உசேன் போல்ட். ஆனால், அவரது போதாத காலம் தொடைப் பகுதியில் ஏற்பட்ட கடுமையான தசைப் பிடிப்பால் மனிதர் அவதிப் படுகிறார். தற்போது சிகிச்சைக்காக ஜெர் மனியில் தங்கியுள்ளார். ஹஜூலை 22 ஆம் திகதி நடைபெற உள்ள லண்டன் அனிவர்ஸரி விளையாட்டுப் போட்டியில் பங்கேற்று தகுதிபெறுவேன்' என அறிவித்திருக்கிறார் போல்ட். ஒலிம்பிக்கில் உசேன் போல்ட் பங்கேற்கவில்லை என்றால், 100 மீற்றர் ஓட்டமே சுவாரஸ்யத்தை இழந்துவிடும். உசேன் போல்ட் இல்லையென்றால், அமெரிக்க வீரர் ஜஸ்டின் காட்லின் 100 மீற்றர் ரில் தங்கம் வெல்ல வாய்ப்பு இருக்கிறது. இந்த ஆண்டில் இவர்தான் 100 மீற்றர ர் ஓட்டத்தை 9.80 விநாடிகளில் கடந்துள்ளார்.

**ஸ்டீபன் கிப்ரோச்சி**

மரதனில் தொடக்கம் முதல் இறுதி வரை சளைக்காமல் ஓடி, பதக்கம் வெல்பவர்கள் கென்யா ரன்னர்ஸ். ஆனால், லண்டன் ஒலிம்பிக்கில் மரதன் போட்டியில் தங்கம் வென்று அசத்தினார். உகண்டா வீரர் ஸ்டீபன் கிப்ரோச்சி. இந்த முறையும் கிப்ரோச்சிக்குத்தான் தங்கம் எனக் காத்திருக்கிறது உகண்டா.


சிமியோன் ஃபைபல்ஸ்

டிருனேஷ் டிபாபா மகளிர் மரதனைப் பொறுத்த வரை, எத்தியோப்பிய வீராங்கனை டிருனேஷ் டிபாபாதான் ராணி. பீஜிங் ஒலிம்பிக்கில் டிபாபாவின் தங்க வேட்டை ரியோ வரை தொடர இருக்கிறது. ஐந்து ஆயிரம் மீற்றர் ரேஸில் உலக சாதனைப் படைத்திருக்கும் டிபாபா, மூன்று ஒலிம்பிக் தங்கப்பதக்கங்களை வென்றிருக்கிறார். லண்டன் ஒலிம்பிக்கில் 10 ஆயிரம் மீற்றர் ரேஸில் தங்கம் வென்ற டிபாபா, இந்த முறையும் 10 ஆயிரம் மீற்றர் பிரிவில் தங்கத்துக்காக் களம் இறங்குகிறார். இந்த முறை கைக்குழந்தையுடன் டிபாபா ஒலிம்பிக்கில் பங்கேற்கிறார் என்பதுதான் ஹைலைட்.

**சிமியோன் ஃபைபல்ஸ்**

சைனீஸ் ஜிம்னாஸ்டிக் வீராங்கனைகளுக்குச் சவால் விடுக்க, அமெரிக்கா உருவாக்கிய வீராங்கனைதான் சிமியோன் ஃபைபல்ஸ். சீனாவில் கடந்த 2014 ஆம் ஆண்டு நடந்த உலக ஜிம்னாஸ்டிக் சாம்பியன்ஷிப்பில் நான்கு பிரிவுகளில் தங்கம் வென்றவர் ஃபைபல்ஸ். இந்த ஒலிம்பிக்கில் ஆல்ரவுண்ட் பிரிவு ஜிம்னாஸ்டிக்கில் தங்கம் வெல்வதே 19 வயது சிமியோனின் இலக்கு.






தினச்செய்தி
என்றும் உங்களுடன்





# மாவிட்டபுரக் கந்தன் திருவிழா









அருள்மிகு மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசாமி கோவில் திருவிழா சென்ற 9 ஆம் திகதி (ஆனி மாத 25 ஆம் நாள்) ஆரம்பமாகியது. இந்த 25 நாள் திருவிழா எதிர்வரும் ஆகஸ்ட் 2 ஆம் திகதி (ஆடி மாதம் 18 ஆம் நாள்) ஆடி தீர்த்தத்துடன் நிறைவு பெறவுள்ளது.

ஸ்ரீ லங்காவில் 2500 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் சோழ இளவரசி மாருதப்புரவீகவல்லியினது விகாரம் அடைந்த குதிரை முகத்தை நீக்கியதை அடுத்து அவ்விடத்திற்கு "தூர காணன விமோஷன புரி" என பெயர் இடப்பட்டது. வடமொழியில் வழங்கப் பட்ட இவ்விடம் அதே பொருள் பட "மா - விட்ட - புரம்" என தமிழில் வழங்கலாயிற்று.

இந்த மாவிட்டபுரத்திலே மாருதப்புரவீகவல்லி தினசரி வணங்கி வந்த கதிரேசன் கோவிலை புதிதாத ஆரம்பிப்பதற்கு இளவசி நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இதையடுத்து சோழ இளவரசியின் தந்தை திசையுக்கிரப் பெருவழுதி மன்னன் மூலஸ்தானம் ஸ்தாபிக்க வேண்டும் என்பதற்காக கந்தசாமி, வள்ளியம்மை, தெய்வாணை விக்கிரகங்களை யும் தீட்சிதர்கள், ஏவலாளர்கள் இன்னும் வேறு பொருள் பண்டங்கள் திரவியங்கள் ஆகியவற்றை மரக்கலத்தில் ஏற்றி இங்குள்ள காசாத்துறைக்கு அனுப்பி வைத்தார்.

காசாத்துறை (காயாத்துறை) காங்கேயன் எனும் மறு நாமம் கொண்ட விக்கிரகம் இங்கு இறக்கப்பட்டதால் காங்கேசன்துறை என நாமம் பெற்றது.

இவ்வாறு புகழ் பெற்ற மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலை சிதம்பர தீட்சகர் வழிவந்தோர் ஆதீன கர்த்தாக்களாக, பிரதம குருக்களாக இருந்து வரு கிறார்கள். முதல் தீட்சகராக பெரியமனத்துள்ளார் 02.06.1789 தொடக்கம் 30.11.1829 வரை இருந் தார். அதையடுத்து 06.03.2011 ஆம் ஆண்டிலி ருந்து இன்று வரை மஹாராஜஶ்ரீ து.ஷ. இரத்தின சபாபதிக் குருக்கள் 39 ஆவது பிரதம குருக்களும் மாவை ஆதீனகர்த்தாவாக இருந்து வருகிறார்.

சாதி மத பேதம் இல்லாமல் இந்த கோயிலுக்கு அனைவரும் வந்தார்கள். ஆனால் 1619 ஆம் ஆண்டு யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட கடைசி மன்னனான சங்கிலி குமாரன் கைது செய் யப்பட்ட பின்னர் போர்த்துக்கேயர் வசம் ஆட்சி கைமாறியது. பிலிப்பே டி ஒலிவேய்ர என்ற போர்த் துக்கேய தளபதி யாழ்ப்பாணத்தை கைப்பற்றி நல்லூர் கந்தசாமி கோவிலை தலைமைக் காரியா லயமாக மாற்றினான். அவன் 500க்கு மேற்பட்ட சைவ ஆலயங்களை தரைமட்டமாக்கினான். இவ் வாறு தரைமட்டமாக்கிய ஆலயங்களில் ஒன்று மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆகும்.

அந்த காலத்தில் அங்கிருந்த வேதியர்களை துன்புறுத்தி இடத்தை விட்டு ஓடச் செய்தான். கோவில் இடித்த கற்களை தங்கள் மதக் கோட் பாட்டிற்கு அமைவாக கத்தோலிக்க ஆலயத்தை யும் கட்டினான். இன்றுள்ள மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலின் முன்பாக அவ்வாறு நிர்மாணிக்கப் பட்ட கிறிஸ்தவ ஆலயத்தின் முகப்பைக் காணக் கூடியதாக உள்ளது.

போர்த்துக்கேய தளபதிகள் மாவிட்டபுரம் கந்த சாமி கோவிலை இடிக்கும் போது அப்போது இருந்த வேதியர்களும், பணிவிடையாளர்களும் கோவில் விக்கிரகங்கள் மற்றும் தளபாடங்களை திருமஞ் சனக் கிணற்றில் இட்டு மூடி வைத்தனர்.

இந்த திருமஞ்சன கிணற்றுக்கு பக்கத்தில் ஒரு மாமரத்தையும் நட்டு வைத்தார்கள். இந்த மாமரத் தையும் நான்கு மூலையில் உள்ள சித்தர் சிலை களையும் இப்பொழுதும் காணக்கூடியதாக உள்ளது.

இந்த கோவிலின் மகிமை என்னவென்றால் இன்றும் 2500 ஆண்டுகள் பழமை வாய்ந்த லிங்கம் ஒன்று உள்ளது. கோவிலுக்கு வரும் முக்கிய பிரமுகர் கையில் வேதியர்கள் லிங்கத்தை கொடுப்பார்கள். மஹாராஜஶ்ரீ இரத்தின சபாபதிக் குருக்கள் லிங்கத்தை கையில் ஏந்தியுள்ள பிரமுகர் கள் நெற்றியில் திருநீறு இட்டு ஆசீர்வதிப்பார். அதே போல் 2500 ஆண்டுகள் பழமை வாய்ந்த வேல் ஒன்றும் இங்கே உள்ளது.

திருவிழாக் காலங்களில் 2 ஆம் வீதியில் அமைந்துள்ள புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வசந்த மண்டப பூசை காலை 11.45 மணியளவில் ஆரம்ப மாகும். இந்த பூசையின் பொழுது இரட்டை இடப வாகனத்தில் கந்தன் வள்ளி தெய்வானை சமேத ராக ஆரோகணித்து, உள்வீதி வலம் வருவார்.

பூசைகளை பிரம்ம ஸ்ரீ உமாசங்கர குருக்களும் அவருக்கு உதவியாக இரத்தின கைலாச நாத சர்மா குருக்களும் நடாத்துவார்கள்.

பகல் திருவிழா ஆரம்பமாவதற்கு முன்பு மாவை ஆஸ்தான வித்துவான் கான கதாவாரி பிரம்மஶ்ரீ சிவ. வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் கந்த புராண கதாப்பிரசங்கம் தினமும் 10 மணிக்கு இடம்பெறும்.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 1 ஆம் திகதி தேர்த் திருவிழா நடைபெறும். தீர்த்தம் ஆடி அமாவாசை அன்று ஆகஸ்ட் 2 ஆம் திகதி நடைபெறும். அதி காலை 5.30 மணிக்கு சுவாமி கீரிமலைக்கு தீர்த் தம் ஆட புறப்படுவார். 6.30 மணிக்கு கண்டகித் தீர்த்தத்துடன் இரவு 9 மணிக்கு 2ஆம் கால பூசை யும் தொடர்ந்து அர்த்தசாம பூசை நடைபெறும்.

இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு ஜூலை 23, 2016 அன்று வெளியிடப்பட்டது.